வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු


மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria ரியா பணப்பரிமாற்றம்
Western Union வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : news@eelanadu.lk மலர் : 04 27.04.2023 வியாழக்கிழமை இதழ் : 138 பக்கங்கள் : 16

## மீண்டும் கோவிட் தொற்று பரவல்!

கொழும்பு, ஏப். 27

நாட்டில் மீண்டும் கோவிட் தொற்று பரவல் ஏற்பட்டுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் உறுதிப்படுத்தியுள்ளது.

நேற்றைய தினம் வெளியிட்ட அறிக்கையின்படி, நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை 4 பேருக்கு கோவிட் தொற்று உறுதிப்படுத்தப் 15

## கச்சதீவில் அமைக்கப்பட்ட புத்தர் சிலை அகற்றப்பட்டது!

### கடற்படை அறிவித்ததாக ஆயர் இல்லம் தகவல்


யாழ்ப்பாணம், ஏப். 27

கச்சதீவு அந்தோனியார் ஆலயம் அமைந்துள்ள பகுதியில் அமைக்கப்பட்ட புத்தர் சிலை அகற்றப்பட்டு விட்டதாக கடற்படை உயர் அதிகாரிகள் ஆயர் இல்லத்துக்கு அறிவித்துள்ளனர் என்று யாழ்ப்பாணம் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை ப. யோ. ஜெபரட்ணம் அடிகளார் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் யாழ். மாவட்ட செயலருக்கு கடிதம் மூலமாக அவர் அறிவித்துள்ளார். அந்தக் கடிதத்தில், புனித அந்தோனியார் திருத்தலம் அமைந்துள்ள கச்சதீவில் அமைக்கப்பட்டிருந்த புத்தர் சிலை அகற்றப்பட்டு விட்டதாக எமக்கு நம்பகரமான செய்திகள் கிடைத்துள்ளன. 15

## யாழை சேர்ந்த சகோதரர்கள் குளத்தில் மூழ்கி உயிரிழப்பு!

### மல்லாவியில் நேற்று துயரம்





முல்லைத்தீவு, ஏப். 27

குளத்தில் நீராடியபோது மூழ்கிய தம்பியும் அவரைக் காப்பாற்ற முயன்ற அண்ணனுமாக சகோதரர்கள் இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்தனர்.

முல்லைத்தீவு - மல்லாவி - வவுனிக்குளத்தில் நேற்று புதன்கிழமை மதியமளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இதில், யாழ்ப்பாணம் - நல்லூர் - யமுனா வீதியைச் சேர்ந்த ரவிச் சந்திரன் சுரேஷ் (வயது 16), ரவிச் சந்திரன் சுமன் (வயது27) 15

# நாட்டை கட்டியெழுப்புவதற்கு சகலரும் இணைய வேண்டும்!



### ஜனாதிபதி ரணில் மீண்டும் அழைப்பு

- ஐ. எம். எவ். தவிர மாற்றுவழி இல்லை
- உள்நாட்டு கடன் மறுசீரமைக்கப்படும்
- ஈ. பி. எவ். உறுப்பினருக்கு அநீதி நிகழாது

கொழும்பு, ஏப்ரல் 27

**சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கை தவிர எமக்கு வேறு எந்த மாற்றுவழியும் இல்லை. மாற்றுவழிகள் எதுவும் முன்மொழியப்படவும் இல்லை என்று தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாட்டை கட்டியெழுப்ப அதிகார மையம் பற்றி மாத்திரம் சிந்திக்கக் கூடாது. இதனை நாம் முன்னெடுக்கத் தவறினால் ஓரிரு ஆண்டுகளில் எங்கள் எவருக்கும் வாழமுடியாத நிலை ஏற்படும். எனவே, அனைவரும் இணைய வேண்டும் - என்றும் கூறியுள்ளார்.**

சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கையை நேற்று பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த பின்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விசேட உரையாற்றினார்.

இதன்போது, இலங்கை மறுமலர்ச்சி பாதையில் பிரவேசித்து மீண்டும் உருவாகி வருகிறது. அதனை முன்னோக்கி கொண்டு செல்வதற்கு முழு நாட்டின் ஆதரவையும் எதிர்பார்க்கிறேன் என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

கடந்த ஆண்டு ஜூலை மாதத்தில் நாட்டில் காணப்பட்ட கலவரம், தீ வைப்பு, அரச வங்குரோத்து நிலைமை போன்ற காரணங்களால் வீழ்ச்சியடைந்த இலங்கையின் பொருளாதாரத்தை 8 மாதங்களில் வெற்றிகரமாக மாற்ற முடிந்தது. அது "இலங்கையின் மீள்வருகை கதை" (Sri lanka comeback story) என அழைக்கப்படுவதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

சர்வதேச நாணய நிதியத்துடன் 16 தடவைகள் உடன்படிக்கைகளை மேற்கொண்ட போதிலும், அந்த உடன்படிக்கைகள் உரிய 15

## சட்டம் ஒழுங்கை பாதுகாக்க கோட்டாபய தவறிவிட்டார்!

### சரத் வீரசேகர குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப். 27

நாட்டில் சட்டம், ஒழுங்கை பாதுகாக்க முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை. அதுவே பெரும் விளைவுகளை ஏற்படுத்தியது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறுகிய காலத்துக்குள் சட்டம், ஒழுங்கை உறுதிப்படுத்தியுள்ளார் என்று பாராளுமன்ற உறுப்பினர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தம் மீதான 15

## மட்டக்களப்பில் டெங்குக்கு 700 பேர் பாதிப்பு; ஒருவர் பலி!

மட்டக்களப்பு, ஏப். 27

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஜனவரி முதல் ஏப்ரல் 25 வரையான காலப்பகுதியில் 700 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் ஒருவர் உயிரிழந்தார் என்றும் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஜீ. சுகுணன் தெரிவித்தார்.

அத்துடன், மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்முனை வடக்கு காத்தான்குடி வாழைச்சேனை மத்தி ஆகிய பிரதேச செயலகப்பிரிவுகளில் டெங்கு நோய் தீவிரமாகப் பரவி வருகிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

டெங்கு நோயை ஒழிக்கும் விசேட வேலைத் 15

## ஈ. பி. எவ்., ஈ. ரி. எவ். இரத்து செய்யப்படலாம்!

### நாலக கொடஹேவா எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 27

தேசிய கடன்களை மறுசீரமைத்தால் ஊழியர் சேமலாப நிதியம் (இ. பி. எவ்.) ஊழியர் நம்பிக்கை நிதியம் (இ. ரி. எவ்.) ஆகிய வற்றை இரத்து செய்ய நேரிடும். இதனால் நடுத்தர மக்கள் பாதிக்கப்படுவார்கள். தேசிய கடன் மறுசீரமைப்பு தொடர்பில் அரசாங்கம் வெளிப்படைத் தன்மையுடன் செயல்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் நாலக கொடஹேவா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தம் மீதான விவாதத்திலே அவர் இவ்வாறு உரையாற்றினார்.

மேலும், சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக் கொண்டதால் பொருளாதார நெருக்கடியில் 15



## வெடுக்குநாறியில் வழிபாடு ஆரம்பம்!

வவுனியா, ஏப். 27

வவுனியாவின் வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் நீண்ட 15

## எங்களுடன் சேர முன்வாருங்கள் - ரணில் சேருவோம் என நினைக்காதீர்கள் - சஜித்

கொழும்பு, ஏப். 27

நேற்றைய தினம் தம்முடன் சேருமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்க்கட்சி தலைவர் சஜித்துக்கு நேரடியாக அழைப்பு விடுத்தார்.

இதற்கு, உங்களுடன் சேருவோம் என்று ஊகிக்காதீர்கள் கலந்துரையாடுவோம் - விவாதிப்போம். ஆனால், உங்களுடன் சேருவோம் என்று நினைக்காதீர்கள் என்று சஜித் கூறினார்.



பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தை சமர்ப்பித்தபோது இடம்பெற்ற இந்த சுவாரசியமான சம்பவம் குறித்து மேலும் அறிய வருவதாவது,

இதைத் தொடர்ந்து 15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

# நாட்டின் இனப்பிரச்னை தொடர்பில் ஐ. எம். எவ்வின் நிபந்தனை என்ன?

## கேள்வி எழுப்பினார் சிறீதரன் எம். பி.

கொழும்பு, ஏப். 27

“எரிகின்ற வீட்டில் கொள்ளி பிடுங்கும் இனம் தமிழினம் அல்ல. வீடு எரிகின்றபோது கொள்ளி பிடுங்கி அதில் இலாபம் தேடுபவர்களும் தமிழர்கள் இல்லை. சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு வழங்கிய நிபந்தனைகளில் இனப்பிரச்னை தொடர்பில் அவர்களால் என்ன நிபந்தனைகள் முன்வைக்கப்பட்டன? என்று கேள்வி எழுப்பியுள்ளார் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

நேற்று பாராளுமன்றில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மீண்டும் ஒரு யுத்தத்துக்கு சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு நிதி வழங்குகின்றதா? கடந்த காலங்களிலும் அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள், சீனா, கியூபா மற்றும் இந்தியா உட்பட அனைத்து நாடுகளும் இலங்கை யுத்தம் நடத்துவதற்கு பெரும் நிதிகளை வழங்கியிருந்தன.

யார்மீது இந்த யுத்தம் இடம்பெற்றது என்றால் சகோதர இனமான தமிழினத்தின் மீது இந்த நாட்டின் குடிமக்கள் மீது யுத்தம் முன்னெடுக்கப்பட்டிருந்தது. இவ்வாறான சந்தர்ப்பங்களில் கண்மூடியிருந்த சர்வதேச நாணய நிதியம் இன்று இலங்கையின் பொருளாதாரத்தை மீட்கப்போவதாக குறிப்பிடப்படுகிறது.

இதேவேளை, இந்த நாட்டில் அரசியல் பிரச்னை இல்லை, மாறாக பொருளாதார பிரச்னை மட்டுமே உள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார். அவருக்கு பொருளாதார ரீதியிலான அறிவு உள்ளதா?” என்றும் கூறினார். (ஐ)

# ராஜித உட்பட மூவருக்கு எதிராக திருத்திய குற்றப்பத்திரிகை தாக்கல்!

கொழும்பு, ஏப். 27

கொழும்பு - மட்டக்குளி - மோதரை மீன்பிடி துறைமுகத்தை தனியார் நிறுவனத்துக்கு குறைந்த விலைக்கு குத்தகைக்கு வழங்கியதன் மூலம் அரசாங்கத்துக்கு நஷ்டம் ஏற்படுத்தினார் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ள முன்னாள் மீன்பிடி வளத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன உள்ளிட்ட மூவருக்கு எதிராக திருத்தப்பட்ட குற்றப்பத்திரிகை நேற்று புதன்கிழமை கொழும்பு மேல் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த வழக்கு நேற்று கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நவரத்ன மாரசிங்க முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

அங்கு, இலஞ்ச ஊழல் ஆணைக்குழு திறந்த நீதிமன்றத்தில் பிரதிவாதிகளுக்கு திருத்தப்பட்ட குற்றப்பத்திரிகையை சமர்ப்பித்தது. (ஐ)

### எரிபொருள் விநியோகம், விற்பனை

# சினோபெக் நிறுவனத்துடன் மேயில் ஒப்பந்தம்!

கொழும்பு, ஏப். 27

இலங்கை வந்துள்ள சீனாவின் சினோபெக் நிறுவனத்தின் அதிகாரிகள் குழுவுக்கும் அமைச்சர் காஞ்சன விஜய சேகரவுக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றது.

எரிசக்தி அமைச்சில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த சந்திப்பில், எரிபொருள் சில்லறை விற்பனைக்கான ஒப்பந்தங்களை இறுதி செய்வதற்கும் விற்பனை நடவடிக்கைகளை தொடங்குவது தொடர்பிலும் அதற்கான காலக்கெடு, தொடர்புடைய ஒப்பந்தத்தின் நிபந்தனைகள் மற்றும் பிற விடயங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டன.

இதற்கமைய, சினோபெக் நிறுவனம் மே மாதத்தின் நடுப்பகுதியில் ஒப்பந்தங்களில் கையெழுத்திடும் என்றும், இலங்கையில் அதன் விற்பனை செயல்பாடுகள், அன்றிலிருந்து 45 நாட்களுக்குத் தொடங்கும் என்றும் முடிவு செய்யப்பட்டது என் றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)



குப்பிழான் கன்னிமார் கௌரி அம்பாள் ஆலய பெருந்திருவிழா நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. தொடர்ந்து 10 தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

# துடுப்பாட்டம், சதுரங்க இறுதிப் போட்டிகள்!

யாழ்ப்பாணம், ஏப். 27

தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தின் அனுசரணையுடன் தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்தால் நடத்தப்படும் துடுப்பாட்டம் மற்றும் சதுரங்கப் போட்டிகள் நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 1.00 மணி முதல் மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த. கிருபாகரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் வட மாகாணக் கல்விப் பணிப்பாளர் தி. ஜோன்குயின்ரஸ் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் அதிபர் ந.சர்வேஸ்வரன், மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி அதிபர் திருமதி லலிதாமலர் முகுந்தன் மற்றும் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி அதிபர் செ.பேரின்பநாதன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும், தென்மராட்சி அபிவிருத்திக் கழக ஐக்கிய இராச்சிய நிதியத்தின் உறுப்பினர் வெற்றிவேலு அசோகன், தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தின் சர்வதேச விளையாட்டு இணைப்பாளர் ம.சிறீதாசன் ஆகியோர் விசேட விருந்தினர்களாகவும் பங்கேற்கவுள்ளனர்.

இலங்கை காப்புறுதிக் கூட்டுத் தாபனத்தின் சாவகச்சேரி கிளை முகாமையாளர் வி.சுதர்சன் மற்றும் சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றப் பொருளாளர் லயன். வ. ஸ்ரீபிரகாஸ் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ)

# இப்படியும் நடக்கிறது...!

பலருக்கு இந்தச் செய்தி பழையதாக இருக்கலாம். சிலருக்கு ஆச்சரியத்தை தரலாம்.

கொழும்பில் உள்ள முக்கிய கல்லூரிகளில் ஒன்று றோயல் கல்லூரி. அது பிரிட்டிஷ் ஆட்சியின்போது கட்டப்பட்ட கல்லூரி. அங்கேதான் இலங்கையில் இருந்த பிரிட்டிஷ்காரர்களின் பிள்ளைகள் கல்வி கற்றார்கள். ஆனாலும் அது இலங்கையர்களும் கல்வி கற்கும் கல்லூரியாகத்தான் இருந்தது.

அந்தக் கல்லூரியில் உள்ள நீச்சல் தடாகத்தில் அந்தக் காலத்தில், அதாவது பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் பிரிட்டிஷ் மாணவர்கள் நீராடமுடியும்.

மாணவர்களுக்காக கட்டப்பட்டிருந்த அந்த நீச்சல் தடாகத்தில் பிரிட்டிஷ் மாணவர்களுடன் அங்கு கல்வி கற்ற தமிழ் மாணவர்கள் மாத்திரமே நீராட அனுமதிக்கப்பட்டனர். அங்கு கல்வி கற்ற சிங்கள மாணவர்கள் நீராடுவதற்கு அனுமதி வழங்கப்படவில்லை.

இதற்குக் காரணம் தமிழ் மாணவர்கள்மீது பிரிட்டிஷ்காரருக்கு இருந்த பாசமோ அன்போ கிடையாது. அவர்கள் வெள்ளைக்காரர்மீது காட்டிய பணிவுக்குக் கிடைத்த பரிசு. அவர்கள் வெள்ளைக்காரர்களை தங்களிலும் பெரியவர்களாக மதித்தமைக்கு கிடைத்த பரிசு.

எப்போதுமே நம்மவர்கள் மற்றைய இனத்தவரை நம்மில் பார்க்கப் பெரிதாக எண்ணிவிடுவது ஒருவகை நோய்தான்.

இப்போது நாட்டில் பேசுபொருள் இந்த பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் பற்றியது தான்.

அந்தச் சட்டத்தை என்ன விலை கொடுத்தும் வராமல் தடுக்கவேண்டும் என்பதிலும் யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்காது. புதிதாக வருகின்ற சட்டத்தை மாத்திரமல்ல, பழைய சட்டத்தையும் நீக்கியே ஆகவேண்டும்.

பழைய சட்டத்தால் இன்றுவரை துன்பத்தை அனுபவித்துக் கொண்டிருப்பவர்கள் நாம் - தமிழர்கள்தான். அதனால்தான் பழையதை நீக்கவும் புதியதை வரவிடாமல் தடுப்பதையும் கோரிக்கையாகக்கொண்டு வடக்கு - கிழக்கில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. நடந்து முடிந்த ஹர்த்தால் தேவையானதுதானா அல்லது அதுபோன்ற ஒரு போராட்டத்தால் தமிழ் மக்கள் பயன்பெறுவார்களா? அல்லது என்னென்ன கோரிக்கைகளை வைத்து போராட்டம் நடத்தினோமோ அவையெல்லாம் சரி செய்யப்பட்டுவிடுமா என்பதெல்லாம் ஏற்கனவே நாம் இந்தப் பத்தியில் பல தடவை சொல்லியாகி விட்டது.

ஆனால், அவ்வாறான கோரிக்கை ஒன்றுக்காக தமிழ்த் தேசியக் கட்சிகள் எல்லாம் ஒன்றாகியபோது, ஓரணியில் நின்றபோது அதில் கொஞ்சமும் சம்பந்தப்படாமல் காட்டிக்கொண்டது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி.

பதின்மூன்றுக்கு எதிராக பல இலட்சம் ரூபாய் செலவு செய்து பேரணி நடத்திய அந்த முன்னணி, அதனால் பதின்மூன்றை வேண்டாம் என்று சொல்லும் சக்திகளுக்கு ஆதரவாக அந்தப் பேரணியை நடத்தியது என்று யாரும் சொல்லிவிடப் போவதில்லை.

ஆனால், இந்த ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்த தமிழ் தேசியக் கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்து ஒரு போராட்டத்தை நடத்துவதற்கு அது தயாராக இருக்கவில்லை.

அதற்காக அந்தப் போராட்டத்தின்போது விடுக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு அவர்கள் எதிரானவர்கள் என்றும் கூறிவிடமுடியாது. ஆனாலும் அந்தப் போராட்டத்தை அவர்கள் கண்டுகொள்ளவே இல்லை.

ஆனால், அதேவேளை, பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையில் எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து புதிய பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு எதிராக அமைத்திருக்கின்ற கூட்டணியில் இணைந்திருக்கின்றது. அதிலும் சிறப்பு அந்தக் கூட்டணியில் கம்மன்பிலவும் இருக்கின்றார். கம்மன்பில போன்றவர்களுடன் சேர்ந்து அமர்ந்திருந்து ஒரு விடயத்தை பேசுவதற்கு அவர்கள் தயாராக இருக்கின்றனர். ஆனால், தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் அமர அவர்கள் தயாராக இல்லை. அடுத்த ஜனாதிபதி தேர்தல்வரை அந்தக் கூட்டணி தொடரும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

இந்தச் செய்தியைப் படித்தபோது, றோயல் கல்லூரி நீச்சல் தடாகத்தில் குளிப்பதற்கு அனுமதிபெற்ற கொழும்பு தமிழர்கள்தான் ஞாபகத்துக்கு வருகின்றார்கள்.

என்ன, அப்போது பிரிட்டிஷ்காரர்கள். இப்போது சிங்கள பெரும்பான்மையினர். வேறுபாடு அவ்வளவு தான்.!

- ஊர்க்குருவி

Eelanadu
27.04.2023 வியாழக்கிழமை

சோபகிருது வருடம், சித்திரை 14

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: eelanaduweekly@gmail.com**
**தொலைபேசி : 021 205 2300**

# முன்னணிக்கு ஏன் நினைவேந்தல் தேவைப்படுகின்றது?

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸின் (தமிழ் தேசிய மக்கள் முன்னணியின்) தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், நினைவேந்தல்களை கைப்பற்ற வேண்டும் - அதனை காங்கிரஸ் மட்டுமே முன்னெடுக்க வேண்டுமென்று தெரிவித்திருக்கின்றார். 2015இல் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதைத் தொடர்ந்து, ரணில் - மைத்திரி அரசாங்கம் நினைவேந்தல்களை சுதந்திரமாக முன்னெடுப்பதற்கு அனுமதித்திருந்தது. அதுவரையில் ராஜபக்ஷக்களின் கண்காணிப்பு அரசுக்கு அஞ்சி, நினைவேந்தல்களை முற்றங்களுக்குள் முடக்கிக் கொண்ட பிள்ளைகளை இழந்தவர்கள் வெளியில் வந்தனர்.

கூடவே, அரசியல்வாதிகளும் வந்தனர். யுத்தத்தின்போது பிள்ளைகளை இழந்தவர்களின் நினைவுகூரும் உரிமைக்காக எப்போதும் நாம் குரல்கொடுக்க வேண்டும். இதனை 'ஈழநாடு' தொடர்ந்தும் வலியுறுத்தி வந்திருக்கின்றது - அதேவேளை நினைவேந்தல்களை தங்களின் அரசியல் முதலீடாகப் பயன்படுத்திக் கொள்வோர் தொடர்பில் மக்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்பதையும் 'ஈழநாடு' வலியுறுத்தி வந்திருக்கின்றது. நினைவேந்தல்களை தங்களின் சொத்தாக எவர் கருதிக் கொள்கின்றார்களோ, அவர்களே நினைவேந்தல்களில் அரசியல் இலாபம் தேடுபவர்களாவர். அவர்கள் யாரென்பதை கஜேந்திரகுமார் பொன்னம்பலமே கூறிவிட்டார்.

தீலிபனின் நினைவுகூரலின்போது பிரச்னைகள் எழுந்தன. இதன்போதும் முன்னணியினர் மீதே குற்றச்சாட்டுக்கள் எழுந்தன. பூபதி கணபதிப்பிள்ளையின் நினைவு கூரலின்போதும் பிரச்னைகள் எழுந்தன. இதன்போதும் முன்னணியின் மீதே குற்றச்சாட்டுக்கள் எழுந்தன. இவ்வாறான குற்றச்சாட்டுக்களில் உண்மையிருக்கின்றதா என்னும் கேள்வி பலரிடம் இருந்தது. ஆனால், நினைவேந்தல்களை கைப்பற்ற வேண்டும் - தாங்கள் மட்டுமே அதனை முன்னெடுக்கத் தகுதியுள்ளவர்கள் - என்று பொன்னம்பலம் கூறியிருப்பதன் மூலம், நினைவேந்தல்களின்போது ஏற்படும் குழப்பங்களுக்கான உண்மையான காரணத்தை இப்போது மக்களால் புரிந்துகொள்ள முடியும்.

2015, ஆட்சி மாற்றத்தின் மூலம்தான் நீண்டகாலமாக நினைவேந்தல்களுக்காக காத்திருந்த மக்களுக்கு அதற்கான வாய்ப்பு கிடைத்தது. ஆனால், அவ்வாறான சூழல் உருவாகியதும், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நினைவேந்தலுக்கு உரிமை கோரும் முயற்சியில் ஈடுபட்டார். ஆனால், ஆட்சி மாற்றத்தை அவர் ஆதரிக்கவில்லை. தேர்தலை பகிஷ்கரிக்குமாறு கோரினார். தேர்தல் பகிஷ்கரிப்பை மக்கள் மேற்கொண்டிருந்தால் அதன் மூலம் மகிந்த ராஜபக்ஷவே நன்மையடைந்திருப்பார். இதன்மூலம் மக்கள் சுதந்திரமாக நினைவு கூருவதற்கான வாய்ப்பு மறுக்கப்பட்டிருக்கும்.

இந்த பின்புலத்தில் நோக்கினால், மக்கள் தங்களின் உறவுகளை, சுதந்திரமாக நினைவுகூர்வதற்கான சூழல் கூட்டமைப்பினால்தான் உருவாகியது. ரணில் - மைத்திரி அரசாங்கத்துடன் கூட்டமைப்பு சில விடயங்களில் இணங்கிப் போனதன் காரணமாகவே சில விடயங்களை சாதிக்க முடிந்தது. சில விடயங்களை சாதிப்பதில் கூட்டமைப்பு சரியாக அணுகவில்லையென்னும் விமர்சனமுண்டு. எவ்வாறெனினும், சுதந்திரமான நினைவேந்தலுக்கான சூழல் கூட்டமைப்பினால் ஏற்பட்டது - ஆனால், கூட்டமைப்பினர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நினைவேந்தலில் பிரச்னைகள் ஏற்படுத்தவில்லை. அதற்கு உரிமை கோரவில்லை.

ஏன் கஜேந்திரகுமாருக்கு நினைவேந்தலில் ஏகபோகம் தேவைப்படுகின்றது? ஏனெனில், மக்களுக்கு சொல்வதற்கு ஆக்கபூர்வமான எந்தவொரு பதிலும் முன்னணியிடம் இல்லை. நடைமுறையில் எவையெல்லாம் சாத்தியமில்லையோ, அவற்றையே அவர்கள் கூறிவருகின்றனர். நடைமுறைக்கு சாத்தியமயற்ற விடயங்களை கூறுகின்றபோது மக்களுக்கு பொறுப்புச் சொல்ல வேண்டிய தேவையில்லாமல் போய்விடுகின்றது. நினைவேந்தல்களை ஏகபோகமாக கைப்பற்றும்போது அவற்றை தங்களின் வாக்கு வங்கிக்கான முதலீடாகப் பயன்படுத்திக் கொள்ள முடியுமென்றே அவர்கள் கருதுகின்றனர். இதற்காகவே முன்னணிக்கு நினைவேந்தலில் ஏகபோகம் தேவைப்படுகின்றது. நினைவேந்தல்களை தங்களின் அரசியல் சுயலாபத்திற்காக கையாள முயற்சிப்பதானது, அடிப்படையிலேயே தவறான செயலாகும்.

## வடக்கில் குருதி தட்டுப்பாடு:

# இரத்த தானம் செய்ய முன்வருமாறு இளைஞர், யுவதிகளுக்கு அழைப்பு!

*யாழ்ப்பாணம், ஏப். 27*

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களில் வசிக்கும் இளைஞர், யுவதிகள் அருகில் இரத்த வங்கி அல்லது இரத்த தான முகாம்களை அமைத்து, இரத்த தானம் செய்வதற்கும் குருதி சேகரிப்பில் ஈடுபடவும் முன்வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

குருதி வகைகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில் இரத்த தானம் செய்ய முன்வருமாறு இரத்த வங்கியினர் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

அத்துடன், இது குறித்து தகவல்களை பெறவும், அறிவிக்கவும் 077 210 5375 என்ற தொலைபேசி இலக்கம் ஊடாகத் தொடர்புகொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் இரத்த வங்கியில் இருக்கவேண்டிய குருதியின் அளவு 330 பைந்த் ஆகும். ஆனால், தற்போது 181 பைந்த் குருதியே காணப்படுகிறது. இதனால் நோயாளர்களுக்கு தேவையான குருதியை வழங்க முடியாதுள்ளதாக மருத்துவமனை நிர்வாகம் தெரிவிக்கிறது.

இரத்த வங்கி தொடர்ச்சியாக இயங்கி, இரத்த தான முகாம்களை நடத்தி குருதியை சேகரித்து வருகின்றபோதும், குருதி விநியோகம் தினமும் அதிகரித்தே செல்கிறது. அத்துடன், குருதி சேகரிப்பை விட குருதி விநியோகம் அதிகரித்தே காணப்படுகிறது. இதனால் கையிருப்பில் உள்ள குருதியின் அளவு குறைந்து காணப்படுவதோடு, நோயாளர்களுக்கு தேவையான குருதியை விநியோகிக்க முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது.

இந்தக் குருதி தட்டுப்பாடு தொடர்பாக முகநூல் மற்றும் ஏனைய ஊடகங்களின் வாயிலாகவும், தனிப்பட்ட ரீதியிலும் அறிவித்திருந்த போதும், போதுமான குருதி கிடைக்காமல், தொடர்ந்து குருதித் தட்டுப்பாடு நிலவுவதாக தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

# முடிவடைந்த காலாவதி திகதியை மாற்றி விற்கப்படவிருந்த சோடா கைப்பற்றல்!



*யாழ்ப்பாணம், ஏப். 27*

யாழ்ப்பாணம் மாநகர பகுதியில் காலாவதி திகதியில் மாற்றம் செய்து விநியோகிக்கப்படவிருந்த ஆயிரத்து 710 சோடா போத்தல்களை மாநகர சுகாதாரப் பகுதியினர் கைப்பற்றியுள்ளனர்.

நேற்றைய தினம் யாழ். மாநகர பொது சுகாதார பரிசோதகர் பா. சஞ்சீவன் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கையின் போதே இந்த சோடா போத்தல்கள் கைப்பற்றப்பட்டன.

பொது சுகாதார பரிசோதகருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் யாழ். மாநகர பகுதியில் எழுமாற்றாக சோதனை நடவடிக்கைகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன. இதன்போது, பிறவுண் வீதியிலுள்ள களஞ்சியசாலை ஒன்றில் காலாவதி திகதி முடிவடைந்த, காலாவதி திகதி அழிக்கப்பட்ட சோடா போத்தல்கள் கைப்பற்றப்பட்டன.

இதன்போது, காலாவதி திகதி அழிக்கப்பட்ட ஆயிரத்து 110 சோடா போத்தல்களும், காலாவதியான 600 சோடா போத்தல்களுமாக ஆயிரத்து 710 சோடா போத்தல்கள் கைப்பற்றப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து களஞ்சிய சாலைக்கு சொந்தமான விநியோகஸ்தர் மீது மாநகர சுகாதார பகுதியினர் சட்ட நடவடிக்கைக்கு தயாராகி வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-03)

# இலங்கையருக்கான வாய்ப்பு அதிகரிப்பு

*கொழும்பு, ஏப். 27*

இலங்கையர்களுக்கான தொழில் வாய்ப்பு எண்ணிக்கையை 8 ஆயிரமாக கொரியா அதிகரித்துள்ளது.

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்காரவுக்கும் கொரிய மனித வள திணைக்களத்தின் பிரதானிகளுக்கும் இடையில் நேற்று சந்திப்பு நடைபெற்றது.

இதன்போதே இலங்கையர்களுக்கான தொழில் வாய்ப்பு அதிகரிக்கப்பட்டது. இந்நிலையில், கொரிய மொழி ஆற்றலுடன் தயாரிப்பு பிரிவில் தொழில் வாய்ப்பை எதிர்பார்த்துள்ள 600 பேரை, கப்பல் கட்டுமானத்துறையில் தொழிலில் ஈடுபடுத்துவதற்கு இதன்போது உடன்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், அடுத்த வருடம் முதல் இ-9 வீசா பிரிவில் கப்பல் கட்டுமானத் தொழில்துறையில் தொழிலாளர்களுக்கு பரீட்சை நடத்தி, 900 பேரை வேலை வாய்ப்புகளில் இணைக்கவும் கொரிய மனித வள திணைக்களம் உடன்பட்டுள்ளது. (ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



**ஏப்ரல் - 27 வியாழக்கிழமை**
**சுபகிருது வருடம் - சித்திரை 14**
**நல்ல நேரம் : 10.30 - 12.00**
**ராகு காலம் : 01.30 - 03.00**
**திதி : அதிதி**




**மேடம்**
குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பிரச்னைகளுக்கு தீர்வு காண்பீர்கள். வியாபாரத்தில் போட்டிகளை எதிர்கொண்டு வெற்றி காண்பீர்கள். உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல்லித் தருவார்.

**இடபம்**
குடும்பத்தாரின் முழு ஒத்துழைப்பு உங்களுக்கு இருக்கும். வியாபாரத்தில் சந்தை ரகசியங்களை தெரிந்துக் கொள்வீர்கள். பணிகளை விரைந்து முடிப்பீர்கள். தடைகள் உடைபடும் நாள்.

**மிதுனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் படபடப்பு வந்து செல்லும். வியாபாரத்தில் மறைமுகப் பிரச்னைகள் வரும். சக ஊழியர்களுடன் பனிப்போர் வந்து நீங்கும். இடம் பொருள் ஏவல் அறிந்து செயல்பட வேண்டும்.

**கடகம்**
கணவன் - மனைவிக்குள் வீண் விவாதம் வந்து செல்லும். கடினமாக உழைத்து லாபம் பெறுவீர்கள். மறைமுக பிரச்னைகள் வந்து விலகும். எதிலும் கவனம் தேவைப்படும் நாள்.

**சிம்மம்**
குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். வியாபாரத்தில் புதுத் தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி அடையும். உத்தியோகத்தில் பாராட்டப்படுவீர்கள். சிறப்பான நாள்.

**கன்னி**
தவறு செய்பவர்களை தட்டிக் கேட்பீர்கள். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். சக ஊழியர்களின் ஆதரவால் நினைத்ததை முடிப்பீர்கள். முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**துலாம்**
கணவன் - மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். வியாபாரத்தில் வேலையாட்களை தட்டிக் கொடுத்து வேலை வாங்குவீர்கள். உத்தியோகத்தில் இழந்த உரிமையை பெறுவீர்கள்.

**விருட்சிகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் திடீர் திடீரென்று எதையோ இழந்ததைப் போல் இருப்பீர்கள். சின்ன இடர்பாடுகளை சமாளிக்க வேண்டி வரும். நேர்மறை எண்ணங்கள் தேவைப்படும் நாள்.

**தனுசு**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். வியாபாரத்தில் புகழ் பெற்ற நிறுவனத்துடன் புது ஒப்பந்தம் செய்வீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரி மதிப்பார். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**மகரம்**
சாமர்த்தியமாகவும் சாதுர்யமாகவும் பேசி சாதிப்பீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்கள் எண்ணிக்கை அதிகரிக்கும். உத்தியோகத்தில் அதிகாரிகள் உங்களுக்கு முன்னுரிமை தருவார்கள்.

**கும்பம்**
புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். உத்தியோகத்தில் புதிய சலுகைகள் கிடைக்கும். கனவு நனவாகும் நாள்.

**மீனம்**
முக்கிய பிரமுகர்களை சந்திப்பீர்கள். வியாபாரத்தில் அதிரடி சலுகைகள் மூலம் லாபமடைவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும் நாள்.

# சூடானில் சிக்கிய 400 தமிழரை மீட்பதற்கு மத்திக்கு ஒத்துழைப்பு

## முதலமைச்சர் பிரதமருக்கு கடிதம்!

சென்னை, ஏப். 27

சூடானில் உள்நாட்டு போரால் ஏற்பட்டுள்ள நெருக்கடியை தொடர்ந்து அங்கு சிக்கித் தவிக்கும் தமிழ்நாட்டை சேர்ந்த சுமார் 400 பேர் உட்பட இந்திய குடிமக்களை அழைத்து வரும் "ஒப்ரேஷன் காவேரி" மீட்பு பணிக்கு தமிழக அரசு அனைத்து வகையிலும் ஒத்துழைப்பு வழங்க தயார் நிலையில் இருப்பதாக பிரதமர் மோடிக்கு தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலின் நேற்று கடிதம் எழுதியுள்ளார்.

அந்தக் கடிதத்தில், சூடானில் உள்நாட்டு போரால் நிலவிய நெருக்கடி நிலை தற்போது முன்னேற்றமடைந்து வரும் நிலையில், இந்திய குடிமக்கள் சூடானில் இருந்து விரைவாக வெளியேற வசதியாக இந்திய விமானப்படை விமானம் மற்றும் இந்திய கடற்படை கப்பல்கள் சூடான் அருகே நிறுத்தி வைக்கப்பட்டுள்ளமை ஆறுதலளிக்கிறது.

தமிழகத்தைச் சேர்ந்த சுமார் 400 பேர் வரை சூடானில் சிக்கித் தவித்து வருகின்றனர். அவர்கள் இந்தியா திரும்புவதற்கான உதவிகளை எதிர்பார்த்து இருப்பது குறித்து பிரதமரின் கவனத்துக்குத் தாம் கொண்டுவர விரும்புவதாகவும், சூடானில் சிக்கித் தவிக்கும் இந்தியர்களில் ஒரு தொகுதியினர் ஐஎன்எஸ் சுமேதா என்ற கப்பலில் இருக்கும் நிலையில் அவர்களின் உறவினர்களிடமிருந்து மாநில அரசுக்கு அவசர அழைப்புகள் வந்துகொண்டிருப்பதாகவும் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

மேலும் இதுதொடர்பாக, தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களைக் குறித்த தகவல்களைப் பெறவும் அங்கு சிக்கித் தவிக்கும் தமிழர்களை விரைவாக வெளியேற்றவும் அனைத்து உதவிகளை வழங்கவும், வெளியுறவுத் துறை அமைச்சகம் மற்றும் சூடானில் உள்ள இந்தியத் தூதரகத்துடன் இணைந்து செயல்படவும் தமிழ்நாடு அரசு தயாராக இருப்பதாகவும் முதல்வர் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார். (ஐ)

# பழனிசாமி ஆட்சிக்காலத்தில் கேள்விகோரலில் முறைகேடு!

## சுகாதாரத் துறை அமைச்சர் சாடல்

சென்னை, ஏப். 27

பழனிசாமி ஆட்சியில் கேள்விகோரல்களில் முறைகேடு நடந்துள்ளதை சி. ஏ. ஜி. அறிக்கை அம்பலப்படுத்தியுள்ளது என்று சுகாதாரத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் தெரிவித்தார்.

அத்துடன், தமிழக சட்டப்பேரவை கூட்டத் தொடர் இறுதி நாளில் மத்திய கணக்கு தணிக்கை துறை தலைவர் (சி. ஏ. ஜி.) அறிக்கையை தாக்கல் செய்தார். அந்த அறிக்கையில், தமிழகத்தில் 2016 முதல் 2021 வரை பழனிசாமி தலைமையிலான அ. தி. மு. க. ஆட்சியில் பல்வேறு துறைகளில் நிர்வாக சீர்கேடுகளும், முறைகேடுகளும் நடந்துள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, பழனிசாமி தனது சம்பந்தி மற்றும் குடும்பத்தினருக்கு கேள்விகோரல்களை ஒதுக்கவே பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத்துறையை தன் வசம் வைத்திருந்தார்.

முறைகேட்டின் உச்சமாக அரசு அதிகாரிகளின் கணினிகளைப் பயன்படுத்தி நெடுஞ்சாலைத்துறையில் ஒப்பந்த புள்ளிகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. 2019 முதல் 2021ஆம் ஆண்டு வரை நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகளின் 57 கணினிகளை பயன்படுத்தி 87 ஒப்பந்தக்காரர்கள் கேள்வி கோரல் தாக்கல் செய்துள்ளனர். இந்த காலகட்டத்தில் தாக்கல் செய்யப்பட்ட 2,091 கேள்வி கோரல் ஒரே கணினியை பயன்படுத்தி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நெடுஞ்சாலைத்துறையில் 2019 முதல் 2021ஆம் ஆண்டு வரை கோரப்பட்ட 9,007 ஒப்பந்தப் புள்ளிகளில் மற்ற எந்த ஒப்பந்தக்காரர்களையும் இந்த ஒப்பந்தத்தில் சேர்க்காமல் தங்களுக்கு வேண்டிய ஒரே குடும்ப உறுப்பினர்கள் மூலம் ஒரே ஐ. பி. முகவரியில் இருந்து தாக்கல் செய்யப்பட்டுள்ளன. ஒரே ஐ. பி. முகவரியில் இருந்து தாக்கல் செய்யப்பட்ட 490 கேள்வி கோரல்கள் ஏற்கப்பட்டு பணிகள் வழங்கப்பட்டுள்ளன. இது அப்பட்டமான விதிமீறல் - என்றார். (ஐ)

## கொடநாடு எஸ்டேட் கொள்ளை;

# சசிகலாவிடம் விசாரணை நடத்த சி. பி. சி. ஐ. டி. பொலிஸார் முடிவு!

சென்னை, ஏப். 27

நீலகிரி மாவட்டம் கோத்தகிரி அருகே கொடநாட்டில் மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு சொந்தமான பங்களா மற்றும் எஸ்டேட் உள்ளது. இங்கு கடந்த 2017ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் கொலை, கொள்ளை சம்பவம் அரங்கேறியது. இந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இந்த சம்பவத்தில் முக்கிய குற்றவாளியான சேலத்தை சேர்ந்த கனகராஜ் கடந்த 2017ஆம் ஆண்டு ஏப்ரல் 28ஆம் திகதி விபத்தில் உயிரிழந்தார்.

மற்றொரு குற்றவாளியான சயான் தனது குடும்பத்தினருடன் காரில் சென்ற போது விபத்தில் சிக்கினார். இதில் அவரின் மனைவி, மகள் இறந்தனர்.

தொடர்ந்து, அடுத்தடுத்து அரங்கேறிய சம்பவங்கள் இந்த வழக்கில் பெரும் சந்தேகங்களை எழுப்பின. ஆட்சி மாற்றத்துக்கு பிறகு கொடநாடு கொலை, கொள்ளை வழக்கு சூடுபிடிக்க தொடங்கியது. இந்த வழக்கை விசாரிப்பதற்காக தமிழக அரசு மேற்கு மண்டல பொலிஸ் அதிகாரி சுதாகர் தலைமையில் தனிப்படை அமைத்தது.

சுதாகர் தலைமையிலான தனிப்படையினர் இந்த வழக்கை மீண்டும் முதலில் இருந்து விசாரிக்க தொடங்கினர். சம்பவம் நடந்த கொடநாடு வீட்டிலும் ஆய்வு மேற்கொண்டு அங்குள்ளவர்களிடம் விசாரித்தனர். மேலும் இது தொடர்பாக கவுண்டம்பாளையம் தொகுதி சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் ஆறுக்குட்டி, கொடநாடு எஸ்டேட் மேலாளர் நட்ராஜ், வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட சயான், வாளையார் மனோஜ் என 300-க்கும் மேற்பட்டோரிடம் தனித்தனியாக அறிவித்தல் அனுப்பி விசாரணை மேற்கொண்டனர்.

மேலும் ஜெயலலிதாவின் நெருங்கிய தோழியான சசிகலாவிடம் கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் 2 நாட்கள் விசாரணை மேற்கொண்டனர். இந்தநிலையில் கொடநாடு கொலை, கொள்ளை வழக்கு சில மாதங்களுக்கு முன்பு திடீரென சி. பி. சி. ஐ. டிக்கு மாற்றப்பட்டது. சி. பி. சி. ஐ. டி, பொறுப்பதிகாரி முருகவேல் தலைமையிலான சிறப்பு பிரிவினர் கொடநாடு வழக்கை தற்போது விசாரித்து வருகின்றனர்.

இந்த நிலையில் சி. பி. சி. ஐ. டி. பொலிஸார் சசிகலாவிடம் மீண்டும் விசாரணை நடத்த திட்டமிட்டுள்ளனர். இதற்காக அவருக்கு அடுத்த மாதம் முதல் வாரத்தில் விசாரணைக்கு முன்னிலையாகுமாறு அழைப்பு அனுப்ப திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது.

கொடநாடு பங்களாவில் என்னென்ன பொருட்கள் இருந்தது என்பது சசிகலாவுக்கு மட்டுமே தெரியும். அதனால் அங்கு மாயமான பொருட்கள் என்ன? கொள்ளை சம்பவம் குறித்து ஏதாவது தெரியுமா? என்பது குறித்து கேட்டு விசாரிக்கவும் முடிவு செய்துள்ளனர்.

முன்னதாக, விபத்தில் உயிரிழந்தார் என்று கூறப்படும் கொடநாடு எஸ்டேட்டில் கொள்ளையிட்ட கனகராஜ் சேலம் எடப்பாடியை சேர்ந்தவர். இவர் இறப்பதற்கு முதல்நாள் ஜோதிடர் ஒருவரை சந்தித்துள்ளார். அவரையும் சி. பி. சி. ஐ. டி. விசாரணை வளையத்துக்கு கொண்டு வந்துள்ளது. (ஐ)

# புதிய பயங்கரவாத சட்டம் மேலும் தாமதமடையலாம்!

கொழும்பு, ஏப். 27

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்துக்கு எதிர்ப்புகள் வலுத்துவரும் நிலையில், அச்சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதை அரசு தாமதப்படுத்தியுள்ளது என தெரியவருகிறது.

மேற்படி சட்டமூலம் முதலாம் வாசிப்புக்கென இந்த வாரம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் எனக் கூறப்பட்டிருந்தாலும், ஜனாதிபதி மற்றும் நீதி அமைச்சர் ஆகியோருக்கிடையில் நடைபெற்ற சந்திப்பின் பின்னர் அந்த முடிவு மாற்றப்பட்டுள்ளது.

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் தொடர்பில் ஆளுங்கட்சிக்குள்ளேயே கருத்து வேறுபாடு நிலவுகின்றது.

எனவே, பரந்தப்பட்ட கலந்துரையாடலுக்கு களம் அமைக்கும் வகையிலேயே சட்டமூலம் முன்வைக்கப்படுவது தாமதப்படுத்தப்பட்டுள்ளது. (அ)

# பாடப் புத்தகங்களை மே மாத இறுதிக்குள் வழங்க நடவடிக்கை

கொழும்பு, ஏப். 27

தற்போது தட்டுப்பாடு நிலவும் மாணவர்களுக்கான பாடப் புத்தகங்களை அடுத்த மாத இறுதிக்குள் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கல்வி வெளியீட்டு திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதுவரை அச்சிடப்பட்ட பாடப்புத்தகங்கள் பாடசாலைகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டு வருவதாக திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

மேல் மாகாணத்திலுள்ள பாடசாலைகளுக்கு கல்வி வெளியீட்டு திணைக்களத்திலிருந்தே பாடப்புத்தகங்கள் நேரடியாக விநியோகிக்கப்படுகின்றன.

பாடசாலை மாணவர்களுக்கான பயிற்சிப் புத்தகங்களும் இவ்வாறு விநியோகிக்கப்படுவதாக கல்வி வெளியீட்டு திணைக்களம் தெரிவித்துள்ளது.

இம்முறை 33 மில்லியன் பாடப்புத்தகங்கள் அச்சிடப்பட்டுள்ளதுடன் அதற்காக 16,000 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (அ)

# பெரமுன அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ அல்லர்

## சாகர காரியவசம் கூறுகிறார்

கொழும்பு, ஏப். 27

“சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ அல்லர். அவர்தான் தேசிய அமைப்பாளர் என கட்சி எந்தவொரு கட்டத்திலும் அதிகாரபூர்வமாக அறிவிப்புகளை விடுக்கவில்லை.”

-இவ்வாறு பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் ஸ்தாபகரான பஸில் ராஜபக்ஷவே அக்கட்சியின் தேசிய அமைப்பாளராக அரசியல் வட்டாரத்தில் அடையாளப்படுத்தப்பட்டார். பஸில் ராஜபக்ஷ பங்கேற்ற நிகழ்வுகளின்போதுகூட அவர் தேசிய அமைப்பாளர் என்றே விளிக்கப்பட்டார்.

ஆனால் பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ அல்லர் என்ற விடயத்தை டலஸ் அணி அண்மையில் அம்பலப்படுத்தியது. இதற்கு மொட்டு கட்சி பதிலடி கொடுக்கவில்லை.

இந்நிலையில் தகவல் அறியும் உரிமை சட்டம் ஊடாக பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு, சாகர காரியவசத்திடம் கேள்வி எழுப்பப்பட்டது.

இதன்போது, பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் அல்லர் என்பதை அவர் ஏற்றுக்கொண்டார். அவர்தான் தேசிய அமைப்பாளர் என கட்சி அதிகாரபூர்வமாக எங்கும் அறிவிக்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

சபுமல் வலவ்வத்த என்பவரே மொட்டு கட்சியின் தேசிய அமைப்பாளராக பெயரிடப்பட்டுள்ளார். (அ)

# அதிகளவு பரசிற்றமோல் உட்கொண்ட சிறுமி பலி!

கொழும்பு, ஏப். 27

உடஹெந்தென்ன, பகுதியில் காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருந்த ஏழு வயதுச் சிறுமி ஒருவர் அதிகளவு பரசிற்றமோல் மாத்திரையை உட்கொண்டதன் விளைவாக உயிரிழந்துள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

உடஹெந்தென்ன, உடுவெல்ல தாமரவல்லி கொலனியில் வசிக்கும் இரண்டாம் தரத்தில் கல்வி பயிலும் சிறுமியே இவ்வாறு உயிரிழந்தார்.

கம்பளை குருந்துவத்தை வைத்தியசாலையில் இருந்து இரண்டு தடவைகள் அவருக்கு பெற்றோர்கள் மருந்து எடுத்துச் சென்றுள்ளனர்.

வைத்தியரால் பரிந்துரைக்கப்பட்ட மருந்தளவுக்குப் பதிலாக வைத்தியசாலையின் மருந்தகத்தினால் பரிந்துரைக்கப்பட்ட வயது வந்தோருக்கான டோஸ் சிறுமிக்கு வழங்கப்பட்டதால், அவர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# இடமாற்றத்தின் பின்னணியில் பொதுப்பாதுகாப்பு அமைச்சர்!

## அஜித் ரோஹண குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப். 27

**தம்மை இடமாற்றம் செய்வதற்கு எடுக்கப்பட்ட தீர்மானம் மிகவும் தீங்கானது எனவும், இதன் பின்னணியில் பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் இருப்பதாகவும் குறிப்பிட்டு, தென் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண, தேசிய பொலிஸ் ஆணைக்குழுவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.**

அதிகாரி ஒருவரை பாதுகாப்பதற்காக டிரான் அலஸ் இவ்வாறு செயற்பட்டுகிறார் என அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஏப்ரல் 18ஆம் திகதி அனைத்து சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர்களையும் அமைச்சர் அழைத்ததாக தனது கடிதத்தில் கூறும் அஜித் ரோஹண, பொலிஸ்மா அதிபரின் அறிவுறுத்தலின் பேரில் தாம் தயாரித்த கடிதம் தொடர்பில் அமைச்சர் கண்டித்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.

தாம் அமைச்சரின் அலுவலகத்துக்கு அழைக்கப்பட்டதாகவும், வருங்கால பொலிஸ் மா அதிபர் பதவி தொடர்பில் சமூக ஊடகங்களில் பரவிய கடிதம் தொடர்பில் குறிப்பிட்டு, தனக்கு இடமாற்றம் வழங்கப்படுவதாக தெரிவித்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.



எனவே இந்த சட்டவிரோத இடமாற்றத்தை ஏற்றுக்கொள்ள வேண்டாம் என பொலிஸ் ஆணைக்குழுவிடம் அஜித் ரோஹணன தனது கடிதத்தில் கோரிக்கை விடுத்துள்ளார். (அ)

# இடமாற்ற உத்தரவுக்கு அஜித் ரோஹண எதிர்ப்பு

கொழும்பு, ஏப். 27

இடமாற்ற உத்தரவுகளை வழங்குவதற்கு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சுக்கு அதிகாரம் இல்லை என தென் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண அமைச்சின் செயலாளர் வியானி குணதிலகவுக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

அதன்படி, அமைச்சின் இடமாற்ற உத்தரவை ஏற்றுக் கொள்வது கட்டாயம் இல்லை எனவும் அவர் அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண உள்ளிட்ட 7 சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்களை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இடமாற்றம் செய்வதற்கு நேற்று முன்தினம் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண, இதற்கு எதிரான கடிதத்தை பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைத்துள்ளார்.

அரசியலமைப்பின் மூலம் பொலிஸ் அதிகாரிகளின் பதவிகளை மாற்றுவதற்கு தேசிய பொலிஸ் ஆணைக்குழுவுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதாகவும் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார். (அ)

# ரயிலில் மோதுண்டு மாணவி உயிரிழப்பு

கொழும்பு, ஏப். 27

மாத்தறையிலிருந்து காலி நோக்கி பயணித்த ரயிலில் மோதுண்டு பாடசாலை மாணவி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் மாத்தறை, நுபே ரயில் கடவைக்கும் பாம்புரான ரயில் நிலையத்துக்கும் இடையில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஹித்தெட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 15 வயதுடைய பாடசாலை மாணவியே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் மேலும் மூன்று நண்பர்களுடன் விருந்துக்கு சென்றுவிட்டு ரயில் தண்டவாளத்தில் நடந்து சென்று கொண்டிருந்தபோது விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் சிறுமியின் சடலம் மாத்தறை வைத்திய சாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மாத்தறை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# முட்டைக்கு சான்றிதழ் வழங்குவதில் இழுபறி!

கொழும்பு, ஏப். 27

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் முட்டைகளை சந்தைக்கு விடுவதற்கான சான்றிதழ்களை வழங்குவதில் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத்துறை மேலும் கால தாமதம் செய்வதால் தொடர் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதாக அரச வர்த்தக சட்டபூர்வ கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக திட்டமிட்டபடி முட்டைகளை சந்தைக்கு விடமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அதன் தலைவர் ஆசிறி வலிசுந்தர தெரிவித்தார்.

எதிர்காலத்தில் மேலும் 5 மில்லியன் முட்டைகளை இறக்குமதி செய்வதற்கான திட்டமிட்டுள்ளதாக அவர் கூறினார்.

இதேவேளை, பிலியந்தலை பிரதேசத்தில் அதிக விலைக்கு முட்டை விற்பனை செய்யப்பட்ட கடையொன்று நுகர்வோர் அதிகார சபையால் சுற்றிவளைக்கப்பட்டது.

அங்கு 9 ரூபா அதிக விலையில் முட்டை விற்பனை செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டது.

சோதனையின்போது, கடையில் தலா 3,120 முட்டைகள் அடங்கிய 12 பெட்டிகள் கண்டெடுக்கப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

குறித்த முட்டைகளை 44 ரூபா கட்டுப்பாட்டு விலையில் நுகர்வோருக்கு விற்பனை செய்யுமாறு நுகர்வோர் அதிகாரசபை அதிகாரிகள் சம்பந்தப்பட்ட வர்த்தகரை எச்சரித்துள்ளனர். (அ)

# ரணிலை தோற்கடிக்கவே மகிந்தவை ஆதரித்தோம்!

## ஜே.வி.பி. இப்படி விளக்கம்

கொழும்பு, ஏப். 27

“ரணில் விக்கிரமசிங்க, விடுதலைப்புலிகளுடன் ஒப்பந்தம் செய்து நாட்டைப் பிரிப்பதற்குத் தயாரானபோது அதைத் தோற்கடிப்பதற்காகவே நாம் மகிந்தவை அன்று ஜனாதிபதியாக்கினோம்” - என்று ஜே.வி.பியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்-

மகிந்த ராஜபக்ஷவை 2005 இல் நாம் ஜனாதிபதியாக்கியதும் அவர் பின்னர் திருடியதும் ஒரே விடயம் அல்ல. வேறு வேறு விடயம்.

நாம் மகிந்தவை ஜனாதிபதியாக்கியது திருடுவதற்கு என்றால் அதை நாம் பாரமேற்போம். ரணில் விக்கிரமசிங்க விடுதலைப்புலிகளுடன் ஒப்பந்தம் செய்து நாட்டைப் பிரிப்பதற்குத் தயாரானபோது அதைத் தோற்கடிப்பதற்காகவே நாம் மகிந்தவை அன்று ஜனாதிபதியாக்கினோம்.

ஆனால், மகிந்த ஆட்சிக்கு வந்ததும் திருடத் தொடங்கினார். அதற்கு எதிராகவும் நாம் போராடினோம். பின்னர் அவரைத் தோற்கடிப்பதற்காகக் களமிறங்கினோம்.

1977 இற்குப் பிறகு ஆட்சிக்கு வந்த எல்லா அரசுகளும் ஊழல், மோசடிகளைச் செய்தே உள்ளன. ஆனால், ஜே.வி.பி. ஆட்சிக்கு இந்த ஊழல், மோசடிகளுக்கு உடன் முற்றுப்புள்ளி வைத்துவிடும்.-என்றார். (அ)

ஈழநாடு



# கற்பனை உலகத்தில் மிதக்கின்றார் ரணில்!

## அவரது உரையை விமர்சிக்கிறது ஜே.வி.பி.

கொழும்பு, ஏப். 27

கற்பனை உலகத்தில் இருந்து கொண்டு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கருத்துக்களை வெளியிட்டுவருவதாக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அனுரகுமார திஸாநாயக்க சபையில் தெரிவித்தார்.

தற்போது ரணில் விக்கிரமசிங்கவின் கற்பனை உலகத்துக்கும், களத்தில் நிற்கின்ற மக்களின் நிஜ வாழ்க்கைக்குமான மோதலையே ஜனாதிபதி ஆரம்



பித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதியின் கற்பனை உலகத்துக்கும் மக்களின் யதார்த்த உலகத்துக்குமான மோதலில் யதார்த்த உலகமே வெற்றியடையும் என்றும் அனுரகுமார சுட்டிக்காட்டினார்.

பாடசாலை மதிய உணவு நிகழ்ச்சி திட்டத்திற்கான நிதி இன்மையால் அந்த திட்டம் முடங்குவதற்கான நிலை ஏற்படும் என்பதை அமைச்சர் ஏற்றுக்கொள்வாரா என்றும் அனுரகுமார திஸ்ஸநாயக்க கேள்வி எழுப்பினார். (அ)

# சுகாதார அமைச்சிடம் கையளிப்பு

கொழும்பு, ஏப். 27

சீன அரசாங்கத்தினால் 80 மில்லியன் அமெரிக்க டொலரில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்பட்ட வெளிநோயாளர் பிரிவு இலங்கைக்கான சீனத் தூதுவரால் சுகாதார அமைச்சிடம் கையளிக்கப்பட்டது.

இலங்கைக்கான சீன தூதுவர் கீ சென்ஹொங் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வெளிநோயாளர் பிரிவை சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெலவிடம் உத்தியோகபூர்வமாக கையளித்தார்.

எட்டு மாடிகளைக் கொண்ட புதிய வெளிநோயாளர் பிரிவு 49,150 சதுர மீற்றர்களைக் கொண்டுள்ளது.

கதிரியக்க பிரிவு, புற்றுநோய்ப் பிரிவு, அறுவைச் சிகிச்சை மையம், நரம்பியல் அறுவைச் சிகிச்சை நிலையம், வெளிநோயாளர் அறுவைச் சிகிச்சை நிலையம், ஆய்வுக்கூடங்கள் உள்ளிட்ட பல சிகிச்சை நிலையங்கள் வெளிநோயாளர் பிரிவில் அமைக்கப்பட்டுள்ளன. (அ)

# கிழக்கு ஆளுநராக செந்தில்?



கொழும்பு, ஏப். 27

ஆளுநர் பதவிகளில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு உத்தேசித்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் மே 2 ஆம் திகதி புதிய ஆளுநர்கள் சிலரை நியமிக்கவுள்ளார் என தெரியவருகின்றது.

இதன்படி கிழக்கு மாகாண ஆளுநராக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் நியமிக்கப்படவுள்ளார் என அறியமுடிகின்றது.

மத்திய மாகாண ஆளுநர் பதவி முன்னாள் அமைச்சர் நவீன் திஸாநாயக்கவுக்கு வழங்கப்படவுள்ளது.

அதன் பின்னர் ஏனைய மாகாணங்களுக்கான புதிய ஆளுநர்கள் நியமிக்கப்படவுள்ளனர். எனினும், தென் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் தற்போது ஆளுநர் பதவி வகிப்பவர்கள் அப்பதவியில் நீடிப்பார்கள் என தெரியவருகின்றது.

# 4 மாதங்களுக்குள் 9 நில அதிர்வுகள்!

## புவிச்சரிதவியல் சுரங்கப் பணியகம்

கொழும்பு, ஏப். 27

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் நாட்டில் 09 நில அதிர்வுகள் பதிவாகியுள்ளதாக புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது.

04 மாதங்களுக்குள் 09 தடவைகள் நில அதிர்வுகள் பதிவாகிய முதலாவது சந்தர்ப்பம் இதுவென பணியகம் குறிப்பிட்டுள்ளது.

அவற்றில் பெரும்பாலன நில அதிர்வுகள் நாட்டின் உட்பகுதியில் பதிவாகியுள்ளதுடன், சில நில அதிர்வுகள் நாட்டை அண்மித்த கடற்பிராந்தியத்தில் பதிவாகியுள்ளன.

அதிகூடிய மக்னிடியூட் அளவான நில அதிர்வு புத்தல - சூரியவெவ பகுதியில் பதிவாகியிருந்தது.

நாட்டில் பதிவாகிய நில அதிர்வுகள் தொடர்பான தரவுகள் ஆய்விற்குட்படுத்தப்பட்டுள்ளதாக பணியகம் குறிப்பிட்டுள்ளது.

குறித்த தரவுகளை சர்வதேச தரவுகளுடன் ஒப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகம் சுட்டிக்காட்டியுள்ளது. (அ)

# ஜனாதிபதியை கலந்துரையாடலுக்கு அழைத்துள்ள பல்கலை. அதிகாரிகள்

கொழும்பு, ஏப்.27

உடனடியாக கலந்துரையாடலொன்றை கோரி ஜனாதிபதிக்கு நேற்றுக் காலை கடிதமொன்றை அனுப்பியுள்ளதாக பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் சங்க சம்மேளனம் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதியுடனான கலந்துரையாடலின் பின்னரே உயர்தர பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளில் தமது சங்கத்தின் உறுப்பினர்கள் கலந்துகொள்வார்கள் என அதன் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பேராசிரியர் சாருதத்த இலங்கசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதி கலந்துரையாடலில் ஈடுபட்டால், உயர்தர பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளில் கலந்து கொள்ள தயாரென பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்க சம்மேளனம் நேற்று முன்தினம் தெரிவித்திருந்தது. (அ)

# மாத்தளை மாவட்டத்தில் 85 எயிட்ஸ் நோயாளர்கள்

கொழும்பு, ஏப். 27

மாத்தளை மாவட்டத்தில் கடந்த வருடம் 85 எயிட்ஸ் நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக மாத்தளை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவில் தெரியவந்துள்ளது.

மாத்தளை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் நாலக பண்டார கோட்டேகொட தலைமையில் மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தின்போது இந்த உண்மைகள் வெளிப்படுத்தப்பட்டன.

இங்கு கருத்து தெரிவித்த மாத்தளை மாவட்ட விசேட வைத்திய நிபுணர் திருமதி இருகா ராஜபக்ஷ, தொற்றுக்குள்ளானவர்களில் ஆணுக்கும் ஆணுக்கும் இடையிலான பாலினம் அதிகரித்து வருவதாகவும் அவர்களுக்கான சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

மாத்தளை, தம்புள்ளை, சீகிரியா மற்றும் ஏனைய சுற்றுலாப் பகுதிகளிலும், மசாஜ் நிலையங்களை அண்மித்த பகுதிகளிலும் பாலியல் தொழிலாளிகள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டு, அவர்களின் தனியுரிமையைப் பாதுகாத்து இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

# தந்தை செல்வாவின் 46ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு யாழ்ப்பாணத்தில்





யாழ்ப்பாணம், ஏப். 27

தந்தை செல்வாவின் 46 ஆம் ஆண்டு நினைவு நாள் அஞ்சலியும் நினைவுப் பேருரையும் நேற்று முற்பகல்10 மணியளவில் தந்தை செல்வா நினைவு அறங்காவலர் குழுத் தலைவர் ஓய்வு நிலை ஆயர் சு.ஜெபநேசன் தலைமையில் தந்தை செல்வா நினைவிடத்தில் இடம்பெற்றது.

இதன்போது தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா தந்தை செல்வாவின் தூபிக்கு மலர் மாலை அணிவித்து சமாதியில் மலரஞ்சலியும் செலுத்தினார்.

இதனைத் தொடர்ந்து ஏனையவர்களும் மலர் மாலை அணிவித்து மலரஞ்சலியும் செலுத்தினார்.

“தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலை வரலாற்றில் தந்தை செல்வா சாதித்தவை” எனும் தலைப்பில் கிழக்குப் பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் அருட்பணி அ.அ.நவரத்தினம் அடிகளார் நினைவுப் பேருரையை ஆற்றினார். (அ)



# சூடானில் சிக்கியிருந்த இலங்கையர்கள் மீட்பு

கொழும்பு, ஏப். 27

சூடானில் சிக்கியிருந்த இலங்கையர்கள் குழுவொன்று பத்திரமாக மீட்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தனது டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

சூடானில் சிக்கியிருந்த 41 இலங்கையர்கள் தொடர்பில் தகவல் கிடைத்ததாகவும் அவர்களில் 13 பேர் மீட்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் கூறியுள்ளார்.

எஞ்சியவர்கள் இந்தியா அல்லது சவூதி அரேபியாவின் உதவியுடன் பத்திரமாக மீட்கப்படுவார்கள் என அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# எல்லாவற்றையும் விற்றுவிட்டு நடுவீதியில் நிற்கப்போகிறோம்

## எச்சரிக்கின்றது ஜே.வி.பி.

கொழும்பு, ஏப்.27

**“நாட்டுக்குச் சொந்தமான நிறுவனங்கள் - வளங்கள் அனைத்தையும் வெளிநாட்டு நிறுவனங்களுக்கு விற்று இறுதியில் நாம் எதுவும் இல்லாமல் நடுவீதியில் நிற்கப் போகின்றோம்” - என்று ஜே.வி.பியின் முக்கியஸ்தர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.**

அவர் மேலும் கூறுகையில், நாட்டின் பிரச்னையைத் தீர்ப்பதற்காக நாட்டில் இருக்கின்ற எதையாவது விற்க வேண்டும் என்று ஜனாதிபதி ரணில் கூறுகின்றார். இதைத்தான் ரணிலின் மாமா ஜே.ஆரும் செய்தார்.

1978 இல் அரச நிறுவனங்களை மறுசீரமைத்தல் என்ற பெயரில் பல நிறுவனங்களை ஜே.ஆர். விற்றார். அதையே இப்போது மருமகனும் செய்கின்றார்.

இப்படியே எல்லாவற்றையும் விற்று விற்று இருப்பதற்கு இடம்கூட இல்லாமல் வீதிக்கு வரப் போகின்றோம்.

அதிக வளங்கள் உள்ள நாடு இது. நல்ல திறமையான மனித வளங்கள் அதிகம் உள்ளன. எவற்றையும் அரச பயன்படுத்தாமல் எல்லாவற்றையும் விற்பதில் தான் குறியாக இருக்கின்றது.

மறுபுறம், பாடசாலைகளில் 40 ஆயிரம் ஆசிரியர்களின் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. வைத்தியசாலைகளிலும் இதே நிலைமை. விசேட வைத்திய நிபுணர்கள் இன்மையால் அனுராதபுர பொது வைத்தியசாலையில் சிறுவர் பிரிவு மூடப்பட்டுள்ளது.

ராஜரட்ட பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளர்கள் இல்லாததால் அங்கும் கற்பிப்பதில் பிரச்னை. இப்படியே நாட்டின் பல்வேறு துறைகள் சிக்கி இருக்கின்றன.

மக்கள் மூன்று நேரமும் சாப்பிட முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இவ்வாறு நாட்டின் சொத்துக்களை விற்பதன் மூலம் நாடு மேலும் சிக்கலுக்குள் விழுமே தவிர முன்னேறாது.

நாட்டைப் பொருளாதார ரீதியாக வீழ்த்தியது மக்கள் அல்லர். ஆட்சியாளர்களே இதைச் செய்தார்கள்.

பெற்றோலியத்தை இந்த நிலைக்குக் கொண்டுவந்தது மக்கள் அல்லர். ஆட்சியாளர்கள்தான் இதைச் செய்தார்கள்.

இப்படி எல்லா வீழ்ச்சிக்கும் ஆட்சியாளர்களே காரணம்.

இதுவரை விற்கப்பட்ட நிறுவனங்களால் அரசுக்கு - இந்த நாட்டு மக்களுக்கு ஏற்பட்ட நன்மை என்ன?-என்றார்.

(அ)



# பாகிஸ்தானுக்கு யானைகளா? இலங்கை அரசாங்கம் மறுப்பு!

கொழும்பு, ஏப். 27

பாகிஸ்தானுக்கு இரண்டு யானைகளை அன்பளிப்பாக வழங்கப்போவதாக வெளியான செய்தியை இலங்கை மறுத்துள்ளது.

கராச்சி மற்றும் லாகூர் விலங்கியல் பூங்காக்களுக்கு இந்த இரண்டு யானைகளும் அனுப்பப்படவுள்ளதாக, பாகிஸ்தானிலுள்ள இலங்கை தூதரக அதிகாரியை மேற்கோள்காட்டி முன்னதாக செய்திகள் வெளியாகியிருந்தன.

பாகிஸ்தானின் விலங்கியல் பூங்காவில் 17 வயதான ஆபிரிக்க யானையான நூர் ஜெஹான் உயிரிழந்ததையடுத்தே, இலங்கை இரண்டு யானைகளை பரிசாக வழங்குவது குறித்த செய்திகள் வெளியாகின.

எனினும், ஊடகங்களில் வெளியான செய்திகளை நிராகரித்துள்ள இஸ்லாமாபாத்தில் உள்ள இலங்கை தூதரகம், அவ்வாறான எந்தவொரு கோரிக்கையும் முன்வைக்கப்படவில்லை என ருவிட்டர் பதிவொன்றில் தெரிவித்துள்ளது.

இதேவேளை, பாகிஸ்தானின் மிருகக்காட்சிசாலைகளில், விலங்குகள் உரியமுறையில் பராமரிக்கப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டு பல ஆண்டுகளாக சுமத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# புதிய பயங்கரவாதச் சட்டமூலத்தை என்னால் முழுமையாக ஏற்கமுடியாது

## அமைச்சர் அலி சப்ரியும் கடும் எதிர்ப்பு

கொழும்பு, ஏப். 27

“பயங்கரவாதிகளை விசாரித்தல் என்ற பெயரில் அப்பாவிகளை அடைத்து வைத்து விசாரிக்க முடியாது. எனவே, புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை முழுமையாக ஏற்க முடியாது.” - என்று வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

‘பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் தொடர்பில் நீங்கள் இணங்குகிறீர்களா?’ என்ற கேள்விக்கு அவர் பதிலளிக்கும்போது,

அதில் என்னால் உடன்பட முடியாத சில விடயங்கள் உள்ளன. ஒருவரைத் தடுத்து வைத்து விசாரிப்பதற்குப் பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு அதிகாரம் வழங்குவதை என்னால் ஏற்க முடியாது. அந்த அதிகாரம் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடம் இருக்க வேண்டும்.

இவ்வாறு சில விடயங்கள் உள்ளன. அமைச்சரவைக் கூட்டத்தில் அதை நான் கூறியிருக்கின்றேன்.

இதில் பலருடன் பேசி இந்தச் சட்டமூலம் திருத்தப்பட வேண்டும். சட்டத்தரணிகள் சங்கத்துடனும் பேச வேண்டும்.

இதைத் துஷ்பிரயோகம் செய்ய முடியாது. பயங்கரவாதிகளை விசாரித்தல் என்ற பெயரில் அப்பாவிகளை அடைத்து வைத்து விசாரிக்க முடியாது.-என்றார்.

(அ)

# மாணவர் காலணி, புத்தகப்பை அடுத்த மாதம் விலை குறையும்

கொழும்பு, ஏப். 27

பாடசாலை மாணவர்களுக்கான பாதணிகள் மற்றும் புத்தக பைகளின் விலைகள் குறைக்கப்படஉள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் மே மாதம் 9ஆம் திகதியின் பின்னர் பாடசாலை புத்தக பைகள் மற்றும் பாதணிகள் என்பனவற்றின் விலைகளை 500 ரூபா முதல் 1000 ரூபா அளவில் குறைப்பதற்கு இணங்கப்பட்டுள்ளது.

நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டியவிடம் உற்பத்தியாளர்கள் இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளனர்.

மாணவர்களுக்கான பாதணிகள் மற்றும் புத்தக பைகள் உற்பத்தி செய்யும் உற்பத்தியாளர்கள் நிதி இராஜாங்க அமைச்சரை சந்தித்துள்ளனர்.

இந்த சந்திப்பைத் தொடர்ந்து விலைகளை குறைப்பதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.

அமெரிக்க டொலரின் பெறுமதி குறைவடைந்துள்ள நிலையில் உற்பத்திக்கான மூலப் பொருட்களின் விலைகள் குறைவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நலனை பாடசாலை மாணவர்களுக்கு வழங்குமாறு நிதி இராஜாங்க அமைச்சர் உற்பத்தியாளர்களைக் கோரியுள்ளார்.

(அ)

# பிறப்பு சான்றிதழ் இல்லாதோருக்கும் இனிமேல் தேசிய அடையாள அட்டை

கொழும்பு, ஏப். 27

பிறப்புச் சான்றிதழ் இல்லாத, 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு, தேசிய அடையாள அட்டையை வழங்கும் புதிய முறைமையை ஆட்பதிவுத் திணைக்களம் ஆரம்பித்துள்ளது.

இதற்கமைய, கிராம சேவகர் பிரிவு ஒன்றில், நிரந்தர முகவரியுடனான, பிறப்புச் சான்றிதழ் இல்லாதவர்களுக்கு, இதற்காக விண்ணப்பிக்க முடியும் என அந்தத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கமைவான சுற்றறிக்கை, அனைத்துப் பிரதேச செயலாளர்கள் மற்றும் கிராம சேவகர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக ஆட்பதிவுத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (அ)

# என்னை தூக்கிலிட வேண்டுமென கர்தினால் ரஞ்சித் விரும்புகிறார்!

## முன்னாள் ஜனாதிபதி மைத்திரி சாடல்

கொழும்பு, ஏப். 27

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் எனக்கு தூக்குதண்டனை நிறைவேற்றப்பட வேண்டும் என கர்தினால் மல்கம் ரஞ்சித் விரும்புகின்றார் என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விசாரணைகள் தொடர்பில் கத்தோலிக்க திருச்சபை பொறுமையை கடைப்பிடிக்க தவறியுள்ளது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் மேற்கொள்ளப்படும் விசாரணைகளின் மூலம் இதுவரை உறுதியான முடிவுகள் எவையும் எட்டப்படவில்லை எனத் தெரிவித்துள்ள அவர் உலக நாடுகள் சிலவற்றில் இவ்வாறான பயங்கரவாத தாக்குதல்கள் குறித்த விசாரணைகள் பத்து அல்லது பதினைந்து வருடங்கள் நீடித்தன என்றும் கூறியுள்ளார்.

விசாரணைகளை வேகமாகப் பூர்த்தி செய்து என்னை சிறைக்கு அல்லது தூக்குமேடைக்கு அனுப்ப கர்தினால் ஆசைப்படுகின்றார் விசாரணைகள் முடிவடையாமலே இந்த குற்றத்தை செய்வதற்கு அவர் விரும்புகின்றார்.

விசாரணைகளின் போது பல முக்கிய விடயங்களுக்கு பதில் இல்லாத நிலையே காணப்படுகின்றது என தெரிவித்துள்ள முன்னாள் ஜனாதிபதி இலங்கைக்கு விசாரணைக்கு உதவிய பல சர்வதேச அமைப்புகளின் அறிக்கைகளையும் கருத்தில்கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

2019 முதல் விசாரணைகள் எவ்வாறு முன்னெடுக்கப்பட்டன என்பது குறித்து கடும் விமர்சனங்களை முன்வைத்துள்ள மைத்திரிபால சிறிசேன முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சில குற்றவாளிகளை விடுதலை செய்துள்ளார் எனவும் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# 119 மருந்துகளுக்கு தட்டுப்பாடு!

கொழும்பு, ஏப். 27

இலங்கைக்கு பயணம் செய்யும் இந்திய சுற்றுலாப் பயணிகள் உள்ளூர் பரிவர்த்தனைகளுக்கு இந்திய ரூபாயை பயன்படுத்த முடியும் என இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்தார்.

இந்திய வர்த்தக மற்றும் தொழில்துறை கூட்டமைப்பு ஏற்பாடு செய்திருந்த இணைய நிகழ்வு ஒன்றில் கருத்துரைத்த அவர், நியமிக்கப்பட்ட நாணயமாக இந்திய ரூபாயை உருவாக்குவது, இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக தீர்வுக்கு உதவுவது மட்டுமல்லாமல், இலங்கைக்கு வருகை தரும் இந்திய சுற்றுலாப் பயணிகளின் பரிவர்த்தனைகளுக்கும் பயன்படும் என்று குறிப்பிட்டார்.

நுவரெலியா சீதையம்மன் ஆலயம் தொடர்பான சிறப்பு தலைப்பை இலங்கையின் பிரதமர் வெளியிட்டு வைத்து ஒரு நாள் கழிந்த நிலையில் இலங்கை மத்திய வங்கி ஆளுநரின் கருத்து வெளியாகியுள்ளது.

இதற்கிடையில், இலங்கையின் பொருளாதார சூழ்நிலையின் தற்போதைய நிலை மற்றும் முன்னோக்கி’ என்ற தலைப்பில் சிறப்புரை ஆற்றிய இலங்கைக்கான இந்திய தூதுவர் கோபால் பாக்லே, இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான வருங்கால பொருளாதார ஒத்துழைப்பின் பகுதிகளை எடுத்துரைத்தார்.

(அ)

# கர்நாடகா சட்டப்பேரவை தேர்தல்: எடப்பாடி பழனிசாமி வேட்பாளரை திரும்பப் பெற்றதன் பின்னணி என்ன?

இந்தியாவில் கர்நாடகா மாநில சட்டப்பேரவை தேர்தல் மே 10ஆம் திகதி நடைபெற இருக்கிறது. இதற்காக போட்டியிட விண்ணப்பித்து இருந்த வேட்பாளர்கள் மனுவை பெறுவதற்கு திங்கட்கிழமை கடைசி நாளாக அறிவிக்கப்பட்டு இருந்தது.

அதிமுகவின் எடப்பாடி பழனிசாமி அணியின் சார்பாக புலிகேசி நகர் தொகுதியில் இரட்டை இலை சின்னத்தில் போட்டியிட வேட்புமனு தாக்கல் செய்து இருந்த அன்பரசன், கடைசி நேரத்தில் தனது மனுவை திரும்பப் பெற்றுக் கொண்டார்.

பாஜகவின் மேலிட பொறுப்பாளர்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க, அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி இந்த முடிவை எடுத்ததாக அதிமுக தெரிவித்துள்ளது. இந்நிலையில், கர்நாடக சட்டமன்ற தேர்தலில் போட்டியிடுவதை காரணம் காட்டி இரட்டை இலை சின்னத்தை வழங்குமாறு டெல்லி உயர்நீதிமன்றத்தில் உள்ள வழக்கில் அடுத்து என்ன நடக்கும்?

பாரதிய ஜனதா கட்சிக்காக வேட்பாளரை அதிமுக திரும்பப் பெறுவது நாடாளுமன்ற தேர்தல் கூட்டணியில் என்ன பலனை பெற்றுத் தரும்?

**எடப்பாடி பழனிசாமி அறிவிப்பு**

கர்நாடக மாநிலத்தில் நடைபெறவுள்ள சட்டமன்ற தேர்தலில், அதிமுக சார்பாக கர்நாடகா மாநில அதிமுக அவைத் தலைவர் அன்பரசன் போட்டியிடுவதாக அறிவிக்கப்பட்டு இருந்தது.

அவருக்கு இரட்டை இலை சின்னத்தை ஒதுக்க தேர்தல் ஆணையம் உத்தரவிட வேண்டும் எனக்கூறி பொதுக்குழு தீர்மானங்களை சுட்டிக் காட்டி எடப்பாடி பழனிசாமி தரப்பு டெல்லி உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து இருந்தது.

இதையடுத்து இந்திய தேர்தல் ஆணையம் அதிமுகவின் அதிகாரப்பூர்வ வேட்பாளருக்கு இரட்டை இலை சின்னத்தை வழங்க அனுமதி வழங்கியது.

புலிகேசி நகர் தொகுதியில் போட்டியிடுவதற்காக கடந்த சில நாட்களுக்கு முன்பு அன்பரசன் மனுத்தாக்கல் செய்து இருந்தார்.

மேலும் அவரது விண்ணப்ப படிவத்தில் அதிமுகவின் அதிகாரப்பூர்வ வேட்பாளர் என்றும் அவருக்கு இரட்டை இலை சின்னத்தை ஒதுக்க வேண்டும் என்று ஏ,பி, படிவத்தில் கட்சியின் தலைமை குறிப்பிட்டு இருந்தது.

ஆனால் வேட்பு மனுவை திரும்பப் பெற கடைசி நாளில், திடீரென அன்பரசன் தனது வேட்பு மனுவை திரும்பப்பெற்றுள்ளார்.

இது தொடர்பாக அதிமுக வெளியிட்டுள்ள அறிக்கையில், புலிகேசி நகர் தொகுதியில் போட்டியிடும் பாஜக வேட்பாளருக்கு ஆதரவாக அதிமுக தனது வேட்பாளரை திரும்பப் பெற வேண்டும் என பாரதிய ஜனதா கட்சியின் மேலிடப் பொறுப்பாளர்கள் முன்வைத்த கோரிக்கையை ஏற்று இந்த முடிவை எடப்பாடி பழனிசாமி எடுத்து இருக்கதாக குறிப்பிடப்பட்டுள்ளது.





எடப்பாடி பழனிசாமி வேட்புமனுவை திரும்பப் பெறுவார் என்பது எதிர்பார்த்த ஒன்று என்று மூத்த பத்திரிகையாளர் ஷ்யாம் தெரிவித்தார்.

'வழக்கமாக கர்நாடகாவில் அதிமுக கோலார் தங்க வயல், காந்தி நகர் தொகுதிகளில் தான் போட்டியிடும். ஆனால் புலிகேசி நகர் தொகுதியில் போட்டியிடுவதாக அறிவித்தபோதே இப்படி நடக்கும் என நான் எதிர்பார்த்தேன்," என்று அவர் தெரிவித்தார்.



**'தேர்தல் ஆணையத்தை ஏமாற்றுகிறார்'**

கர்நாடகாவில் கோலார் தங்க வயல், காந்திநகர், புலிகேசி நகர் தொகுதியில் போட்டியிட ஓ.பி.எஸ் தரப்பினர் மனுத்தாக்கல் செய்து இருந்தனர். அதில் காந்தி நகர் தொகுதியில் போட்டியிட மனுத்தாக்கல் செய்து இருந்த ஓபிஎஸ் அணி வேட்பாளர் கே.குமாரின் மனு ஏற்கப்பட்டது.

கோலார் தங்க வயல் தொகுதியில் போட்டியிட மனுத்தாக்கல் செய்து இருந்த ஆனந்தராஜின் வேட்புமனுவில் பி படிவம் இல்லாததால், அவரை சுயேட்சை வேட்பாளராக ஏற்றுக் கொண் டது தேர்தல் ஆணையம். மற்றொரு வேட்பாளரின் மனு நிராகரிக்கப்பட்டது.

ஆனால் திடீரென ஓபிஎஸ் தரப்பில் அறிவிக்கப்பட்ட மூன்று வேட்பாளர்களையும் திரும்பப் பெறுவதாக அறிவிக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து எடப்பாடி பழனிசாமியும் தனது தரப்பு வேட்பாளரை திரும்பப் பெற்றுள்ளார்.

இது தொடர்பாக பேசிய ஓ.பி.எஸ். ஆதரவாளரான புகழேந்தி, வேட்பாளரை அறிவித்து திரும்ப பெறுவதன் மூலம் தேர்தல் ஆணையத்தை ஏமாற்ற எடப்பாடி பழனிசாமி முயற்சி செய்துள்ளார் என கூறினார்.

"கர்நாடக தேர்தலை காரணமாக வைத்து, தேர்தல் ஆணையத்திடம் இரட்டை இலை சின்னத்தை வாங்க எடப்பாடி கணக்கு போட்டிருந்தார். அவருக்கு தேர்தலில் வேட்பாளரை நிறுத்தும் எண்ணம் ஏதும் இல்லை. வேட்பாளரை நிறுத்தி இரட்டை இலை சின்னத்தை ஒதுக்க உத்தரவு வந்த பிறகு இப்போது மனுவை திரும்ப பெற்று இருக்கின்றனர். இரட்டை இலைக்காக பொய் சொல்லி வேட்பாளரை நிறுத்தி இருக்கிறார். இது தேர்தல் ஆணையத்தை ஏமாற்றும் முயற்சி. நிச்சயம் இது குறித்து டெல்லி உயர்நீதிமன்ற விசாரணையில் பதிலடி கிடைக்கும்," என்று தெரிவித்தார்.



**"பந்து எங்கள் பக்கம்"**

அதிமுக சார்பாக அறிவிக்கப்பட்ட வேட்பாளர் திரும்பப்பெற்றது குறித்து பேசிய அதிமுக செய்தித் தொடர்பு பிரிவு செயலாளர் வைகைச்செல்வன், வலிமையான அரசு அமையவே வேட்பாளரை திரும்பப் பெற்றோம் எனத் தெரிவித்தார்.

"கர்நாடகா மாநிலத்தில் பாஜக தலைமையிலான கூட்டணி அதிக இடங்களில் வெற்றி பெற உதவும் நோக்கில், அந்த கட்சியின் தலைமை கேட்டுக் கொண்டதால் எங்கள் வேட்பாளரின் மனுவை திரும்பப் பெற்றோம். இது கூட்டணியின் நலனுக்காக எடுக்கப்பட்ட முடிவு," என்று வைகைச்செல்வன் தெரிவித்தார்.

தமிழ்நாடு பாஜக தலைவர் அண்ணாமலையும், அதிமுக பொதுச் செயலாளரும் பாஜக - அதிமுக கூட்டணி குறித்து சில கருத்துகளை தெரிவித்து இருந்த நிலையில், இந்த முடிவு எந்த அடிப்படையில் எடுக்கப்பட்டது என்ற கேள்விக்கு பதிலளித்த அவர், எடப்பாடி பழனிசாமியும், அண்ணாமலையும் வெளிப்படுத்தியது கட்சியின் நிலைப்பாடு. அதனால் கூட்டணியில் எந்த பாதிப்பும் இல்லை என்று தெரிவித்தார்.

"வரும் நாடாளுமன்ற தேர்தலில் தேசிய கட்சி தலைமையிலான ஒரு கூட்டணியால் மட்டுமே தாக்கத்தை ஏற்படுத்த முடியும். மாநில கட்சிகளின் பங்கும் அதில் இருந்தாலும், தேசிய கட்சியால் பெரிய விளைவுகளை உருவாக்க முடியும். அதன் அடிப்படையில் அதிமுக - பாஜக கூட்டணி தொடர்கிறது. ஆனால் தமிழ்நாட்டை பொறுத்தவரை, அதிமுக தலைமையில் பாஜகவுடனான கூட்டணி தொடரும். இதில் அண்ணாமலை பேசிய கருத்துகளால் எந்த பாதிப்பும் ஏற்படாது," என்று வைகைச்செல்வன் கூறினார்.

'தேர்தல் ஆணையத்தை ஏமாற்றினார் என்ற புகழேந்தியின் குற்றச்சாட்டுக்கு பதிலளித்த வைகைச்செல்வன், தேர்தல் ஆணையத்திடம் எங்கள் அணிக்கு இருக்கும் பெரும்பான்மை ஆதரவை காட்டி விட்டோம். செயற்குழு, பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை நீதிமன்றங்கள் ஏற்றுக்கொண்டுள்ளன. அதனால் சின்னம் தொடர்பான கோரிக்கையில் பந்து எங்கள் பக்கம் தான் சாயும். புகழேந்தியின் கருத்து அரசியல் காழ்ப்புணர்ச்சி," என்று தெரிவித்தார்.

இது தொடர்பாக கருத்து தெரிவித்த மூத்த பத்திரிகையாளர் ஷ்யாம், 'தேர்தல் சின்னங்கள் ஆணை விதி எண் 10 மீறப்பட்டுள்ளது. கர்நாடக தேர்தலில் போட்டியிடுவதை காரணம் காட்டித்தான் எடப்பாடி பழனிசாமி டெல்லி உயர்நீதிமன்ற வழக்கு மூலமாக தேர்தல் ஆணையத்தின் ஆணையை பெற்றார். ஆனால் தேர்தல் ஆணையத்தை தனக்கு சாதகமாக வளைக்க கர்நாடக தேர்தலை எடப்பாடி பழனிசாமி பயன்படுத்திக் கொண்டார். இது விரைவில் வரவிருக்கும் டெல்லி உயர்நீதிமன்ற விசாரணையில் எதிரொலிக்கும்," என்று பேசினார்.

வேட்பாளரை திரும்பப்பெறுவதன் மூலம் மாநிலத்தில் நிலவும் வேற்றுமையை கடந்து பாரதிய ஜனதா கட்சியின் டெல்லி தலைமையுடன் தனக்கு இருக்கும் நெருக்கத்தை காட்டுகிறார் எடப்பாடி பழனிசாமி என்று ஷ்யாம் தெரிவித்தார்.
(பிபிசி)

# உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் ஏன் நிராகரிக்கப்பட வேண்டும்?

## இலங்கையில் ஜனநாயகத்திற்கான குரல் விளக்கம்




இலங்கைப் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ள பயங்க ரவாத எதிர்ப்புச் சட்டம், இலங்கையின் சுதந்திரத்திற்குப் பின்னரான வரலாற்றில் அதன் அரசியல், சட்டவாக்க மற்றும் நீதித்துறை விவகாரங்களில் நிலவும் அதி காரத் துஷ்பிரயோகங்களின் பின்னணி யில் பார்க்கப்பட வேண்டும். சமீப காலங்களில் நாட்டில் அதிகார துஷ்பிரயோகம் மற்றும் தவறான பொருளாதார நிர்வாகத்திற்கு எதிராகக் கிளர்ந்தெழுந்த அமைதி வழிப் போராட்டக்காரர்கள் மற்றும் எதிர்ப்பாளர்களுக்கு எதிராக அரசு எடுத்த பயங்கர நடவடிக்கைகளை நாம் நினைத்துப் பார்த்தல் பொருத்தமாகும்.

அடிப்படை மனித உரிமை மீறல்கள் தொடர்பான இலங்கையின் சரித்திரப் பதிவுகள் திகைக்கவைப்பவை. உள்ளூர் மற்றும் சர்வதேச அளவில் பல அமைப்புகளும் தனிநபர்களும் இந்நிலைமை குறித்துத் தொடர்ந்து தீவிர கவலைகளை வெளிப்படுத்தியதோடு, தீர்வு நடவடிக்கைகளை எடுக்குமாறும் பலமுறை அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளனர்.

1979 ஆம் ஆண்டு முதல் அரசாங்கத்தின் விதிப் புத்தகமாய் இருக்கும் தற்போதைய பயங்கரவாத தடுப்புச் சட்டத்தைக் கொண்டு, சுதந்திரத்திற்குப் பிறகு அடுத்தடுத்து வந்த ஆட்சிகளால் தளம் அமைத்துக் கொடுக்கப்பட்ட இனப்பிரச்சினை மட்டிலான ஆயுத மோதலைத் தடுக்க முடியவில்லை. இச்சட்டத்தின் பயங்கரவாதம் எனும் பரந்த வரையறையின் கீழ், விசாரணைக்கு முந்திய நீண்டகால தடுப்புக்காவல்கள், சித்திரவதைகள், சிறுபான்மையினர் மற்றும் அரசியல் எதிர்ப்பாளர்களை இலக்குவைப்பது போன்றவற்றை நிறுத்தும் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டுமென ஐக்கிய நாடுகள் சபை அரசாங்கத்தைக் கேட்டிருந்தது.

ஐ.நா.வின் கோரிக்கையானது தற்போதைய பயங்கரவாத தடைச்சட்டத்தை இரத்துச் செய்து, அதற்குப் பதிலாக சர்வதேச தரத்திற்கு இசைவான இணக்கப்பாடு, வெளிப்படைத்தன்மை மற்றும் மக்கள் பங்கேற்புகொண்ட புதிய சட்டத்தை உருவாக்க வேண்டும் என்பதே. இதற்கு பயங்கரவாதத்தின் பரந்த வரையறையை குறைத்து, அத்தகைய சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களுக்கு முறையான சட்டப் பாதுகாப்புகளை வழங்க வேண்டும் என்பதுடன், அவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைத்து இடங்களையும் சுதந்திரமாக கண்காணிக்கவும் அனுமதிக்க வேண்டும். மாறாக, முன்மொழியப்பட்டுள்ள சட்டமூலமோ, பயங்கரவாத வரையறையின் நோக்கத்தை மேலும் விரிவுபடுத்துவதன் மூலம், முனைப்புடன் செய்யும் அடிப்படை மனித உரிமை மீறல்களை வலுப்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இதனால் அரசியல் அதிகாரத்தை வைத்திருப்பவர்கள் தாங்கள் மௌனப்படுத்த விரும்பும் எந்தவொரு நிறுவனத்திற்கும், அமைப்பிற்கும் அல்லது தனி நபருக்கும் எதிராக அதைப்பயன்படுத்தலாம்.

முறையான நீதித்துறை மேற்பார்வையின்றி ஜனாதிபதி மற்றும் பாதுகாப்புப் படைகளுக்கு பரந்த அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ள நிலையில், சாட்சியங்கள் இன்றி மக்களைத் தடுத்து வைப்பதற்கும், தன்னிச்சையாக அமைப்புகள் மற்றும் கூட்டங்களைத் தடை செய்வதற்கும், விமர்சனங்கள், கருத்து வேறுபாடுகள் மற்றும் எதிர்ப்புகளை குற்றமாக்குவதற்கும் இது இடமளிக்கிறது. மேலும் இச் சட்டமூலத்தில் பாரிய மாற்றங்கள் எதுவும் செய்யப்பட மாட்டாது என நீதியமைச்சர் பலமுறை கூறியுள்ளதோடு, சமூகங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை மேம்படுத்துவதற்கு இது பயன்படுத்தப்படும் என அண்மையில் கூறியது மிகவும் கேலிக்குரியது. சர்வதேச சமூகம் இதைப் பொறுத்துக் கொள்ளாது.

இந்த பின்னணியில்தான், அனைத்து இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் உத்தேச பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இயற்ற வேண்டாம் என்றும், ஜனநாயகம் மற்றும் சட்டத்தின் ஆட்சிக்கு அதிக முன்னுரிமை வழங்குமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. அரசாங்கம் தனது குடிமக்களின் கூக்குரலுக்கு செவிசாய்த்து, மக்கள் நலன சார்ந்த சட்டங்களை மட்டுமே இயற்ற வேண்டிய நேரம் இது. இது தொடர்பாக இரு தினங்களுக்கு முன் அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் ‘இலங்கையில் ஜனநாயகத்திற்கான குரல்’ எனும் சர்வதேச வலையமைப்பு மும்மொழிகளிலும் அனுப்பிவைத்த கடிதத்தின் தமிழ்ப் பிரதி வருமாறு:

அனைத்து இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஓர் அன்பான வேண்டுகோள்:

கௌரவ. பிரதமர், அமைச்சரவை அமைச்சர்கள் மற்றும் இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர்களே!

முன்மொழியப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை இயற்ற வேண்டாம் ஜனநாயகம் மற்றும் சட்டத்தின் ஆட்சிக்கு முதலிடம் கொடுக்கவும்.

ஒரு பாராளுமன்ற உறுப்பினரின் மிகவும் புனிதமான கடமைகளில் ஒன்று, தங்கள் தொகுதி மக்களின் கருத்துக்கள் மற்றும் நலன்களை இதயத்தில் வைத்து புதிய சட்டங்களை உருவாக்குவதும், ஏற்கனவே உள்ள சட்டங்களை மாற்றுவதும் ஆகும். பாராளுமன்ற மசோதாக்களை கவனமாக ஆராய்வது, பொது நலனுக்கான கொள்கைகளை விவாதிப்பது, மற்றும் அரசாங்க முடிவுகளை மறுபரிசீலனை செய்வது ஆகியவை இந்த முக்கிய கடமையை நிறைவேற்றுவதில் இன்றியமையாத பங்கை வகிக்கின்றன.

பயங்கரவாதத் தடைச் சட்ட மசோதா எதிர்வரும் வாரத்தில் பாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள நிலையில், அது மக்களின் வாழ்வுக்கும் எதிர்கால சந்ததியினருக்கும் ஏற்படுத்தக்கூடிய நீண்டகால விளைவுகளை உணர்ந்தவர்களாக, உரிய கவனம் செலுத்துமாறு கேட்டுக் கொள்கிறோம்.

நான்கு தசாப்தங்களுக்கும் மேலாக தற்போதைய பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் நாடு மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. கடந்த கால தவறுகளை சரிசெய்து இந்த சட்டமூலத்தை சரியாக உருவாக்குவது எமது அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களின் கடமையாகும். இம்மசோதாவில் காணும் பிரச்சினைக்குரிய விடயங்கள் எவை? பின்வருபவை உட்படப் பல உள்ளன:

- ‘மோசமான சட்டத்தை’ மாற்றுவதாகக் கொண்டுவரப்படும் மசோதா, உண்மையில் தற்போதைய சட்டத்தை விட மிகவும் மோசமானது
- பயங்கரவாத எதிர்ப்புச் சட்டங்கள் தொடர்பாக ஐ.நா.வால் நிர்ணயிக்கப்பட்ட அளவுகோல்களை இது பூர்த்தி செய்யவில்லை.
- மசோதாவில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றங்கள் பரந்த அளவிலானவையும், தெளிவற்றதும், அகநிலை சார்ந்ததாகவும் இருப்பதால், சட்டத்துஷ்பிரயோகம் மற்றும் நீதி வழுவுவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளன
- பிரதிப் பொலிஸ் மாஅதிபர் நீதித்துறை சாராத தடுப்புக்காவல்களைக் கோரலாம், அத்துடன் முறையான குற்றச்சாட்டுகள் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர் கைதுகள் மேற்கொள்ளப்படும்.
- நீதித்துறை மேற்பார்வையின்றி நபர்கள் மற்றும் நிறுவனங்களை ஜனாதிபதி தடை செய்ய முடியும்.
- அரசாங்கம் தனது அரசியல் எதிரிகள் என்று கருதுபவர்களையும் அமைப்புகளையும் முத்திரை குத்துவதற்கும், சட்டபூர்வமான நிலையை நீக்கம் செய்வதற்கும் சாத்தியம் உள்ளது் அரச நடவடிக்கைகளை மறுப்பவர்களும் எதிர்ப்பவர்களும் குறிப்பிடப்படாத காலத்திற்கு சிறையில் அடைக்கப்படலாம்
- தன்னிச்சையான கைது, தடுப்புக்காவல் மற்றும் சித்திரவதைகளைத் தடுப்பதற்கான விதிகள் இம்மசோதாவில் இல்லை என்பதுடன், உரிய நடைமுறை மற்றும் நியாயமான விசாரணைக்கு உத்தரவாதங்கள் இல்லை - இதனால், மனித உரிமைகளை நிலைநிறுத்துவதற்கு அரசாங்கம் சர்வதேச சமூகத்திற்கு அளித்த உறுதிமொழியை மீறுகிறது
- நியாயமான காரணங்கள் இருப்பதாக கருதினால், யாரையும் தடுத்து நிறுத்தவும், கேள்வி கேட்கவும், தேடவும், கைது செய்யவும், அல்லது எந்த ஆவணம் அல்லது பொருளையும் பிடியாணை இல்லாமல் பறிமுதல் செய்யவும், காவல் துறை மற்றும் இராணுவத்திற்கு இது மிகப்பரந்த அதிகாரங்களை வழங்குகிறது.
- ஒரு மோசமான சட்டத்தை நீக்க மிகமோசமான சட்டத்தைக் கொண்டு வருவது, ஜனாதிபதி கூறுவதுபோல் ஐரோப்பிய ஒன்றியம் அல்லது பிற சர்வதேச நன்கொடையாளர்களிடமிருந்து எந்தப் பொருளாதாரப் பலன்களையும் பெற்றுத்தராது. சர்வதேச சமூகத்தை ஏமாற்ற முடியாது.

பல தெளிவற்ற சட்டப்பிரிவுகளைக் கொண்ட இம்மசோதா பலவகையான துஷ்பிரயோகத்திற்கு இடமளிப்பதுடன், ஒட்டுமொத்த சமூகத்திற்கும் நீண்டகால வேதனைக்குரிய விளைவுகளை ஏற்படுத்தும். இவையனைத்தையும் கருத்தில் கொண்டு, தற்போதைய வடிவத்திலுள்ள மசோதா ரத்து செய்யப்பட வேண்டும்.

அதிகாரத்தை வைத்திருக்கும் அரசியல்வாதிகள் என்ற வகையில், தார்மீக உறுதியுடனும் நேர்மையுடனும் சரியானதைச் செய்யுமாறு நாம் உங்களை கேட்டுக்கொள்கிறோம். பொது நலம், அரசியல் நேர்மை, மற்றும் ‘சட்டத்தின் ஆட்சி மட்டில் மரியாதை’ என்பன தன்னலத்தை வெற்றி பெறும் ஒரு தருணம் இதுவென நாம் நம்புகிறோம்.

தயவுசெய்து முன்மொழியப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்திற்கு தைரியத்துடனும் திடநம்பிக்கையுடனும் ‘இல்லை” என்று வாக்களிக்கவும்.

அவ்வாறு செய்யத் தவறுவதென்பது சமூக, அரசியல், பொருளாதார சுய அழிவிலிருந்து தேசத்தைக் காக்கும் பணியின் முன்னே அதன் கூட்டு மனோதிடம் வாடிப்போனதற்கு ஒப்பாகும்.

கலாநிதி லயனல் போபகே (தலைவர்)
- திரு அன்ரனி கிறேசியன் (இணைச்செயலாளர்)
திரு ரஞ்சித் ஹேநாயக்க ஆராச்சி, (ஜேர்மனி)
பேராசிரியர் சுரேஷ் சுரேந்திரன் (ஐக்கிய ராச்சியம்)
திரு தர்மசேன யகந்தவெல (கனடா)
இலங்கையில் ஜனநாயகத்திற்கான குரல்,
சர்வதேச வலையமைப்பு
(அவுஸ்திரேலியா, கனடா, ஐரோப்பா, ஐக்கிய இராச்சியம்)

●

# இலங்கையில் பெரியளவிலான நிலநடுக்கங்கள் ஏற்படமாட்டா!

## புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கப்பணியகம்

கொழும்பு, ஏப். 27

இலங்கையில் பெரும் நிலநடுக்கங்கள் ஏற்படும் அபாயம் இல்லை என்று புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கப்பணியகம் தெரிவித்துள்ளது.

எனினும், கடந்த 4 ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில், இந்த ஆண்டில் நிலநடுக்கங்களின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளது.

2020இல் 16 நிலநடுக்கங்களும் 2021இல் 18 நிலநடுக்கங்களும் 2022இல் 5 நிலநடுக்கங்களும் பதிவாகியுள்ளன என்றும் புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது.

இந்த வருடத்தின் கடந்த 4 மாதங்களில் 9 நிலநடுக்கங்கள் பதிவாகியுள்ளன.

மக்கள் முன்வைத்துள்ள பிரச்னைகளுக்கு விஞ்ஞான ரீதியாக விளக்கமளிப்பதற்காக புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கப்பணியகம், வளிமண்டலவியல் திணைக்களம், அனர்த்த முகாமைத்துவ நிலையம், ஏனைய நிறுவனங்கள் இணைந்து நேற்று நடத்திய ஊடக சந்திப்பிலேயே இந்த விடயங்கள் தெரிவிக்கப்பட்டன.

# விமலின் கருத்துகளுக்கு பாதுகாப்பு அமைச்சு மறுப்பு

கொழும்பு, ஏப். 27

பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச வெளியிட்ட சில சர்ச்சைக்குரிய கருத்துகளை பாதுகாப்பு அமைச்சு நிராகரித்துள்ளது.

பாதுகாப்பு அமைச்சு நேற்று வெளியிட்ட அறிக்கையில்,

தென் இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் நட்பு நாடுகளுக்கிடையே ஏற்பாடு செய்யப்பட்ட பாதுகாப்பு மாநாடான கொழும்பு பாதுகாப்பு மாநாட்டின் துணை தேசிய பாதுகாப்பு ஆலோசகர் நிலை கூட்டம் 2022 ஜூலை 07ஆம் திகதி அன்று இந்தியாவில் நடைபெற்றது.

அப்போதைய ஜனாதிபதி மற்றும் பாதுகாப்பு அமைச்சின் வழிகாட்டுதல் மற்றும் அனுமதியின் கீழ் இலங்கை பாதுகாப்புப் படைகளின் பிரதம அதிகாரி மற்றும் முன்னாள் இராணுவத் தளபதியான ஜெனரல் ஷவேந்திர சில்வா இலங்கை அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தி அக்கூட்டத்தில் பங்கேற்றார் என்பதை பாதுகாப்பு அமைச்சு வலியுறுத்துகிறது.

ஹிரு தொலைக்காட்சியின் இன்று (நேற்று) இடம்பெற்ற (ஏப்ரல் 26) 'பத்தரே விஸ்தரே' நிகழ்ச்சியில் கலந்து கொண்ட ஊடகவியலாளர் சமுதித சமரவிக்கிரம, விமல் வீரவன்ச தனது 'நவய: சங்கவுனு கதாவ' (ஒன்பது மறைக்கப்பட்ட கதை) நூல் வெளியீட்டு விழாவில் உரையாற்றுகையில்,

2022ஆம் ஆண்டு மே 09 அன்று நடைபெற்ற போராட்டத்தின் பின்னணியில் இருந்தவர்களின் முதல் திட்டம் அப்போதைய நிறைவேற்று ஜனாதிபதியையும் பாதுகாப்பு தலைவர்களையும் ஜனாதிபதி மாளிகையில் வைத்து படுகொலை செய்வதே என்றும் ஜெனரல் சவேந்திர சில்வாவின் இந்திய விஜயம் சந்தேகத்தை ஏற்படுத்துகிறது என குற்றம் சாட்டியிருந்தார்.

இதன்படி, மேற்படி கருத்து அடிப்படையற்றது. பாதுகாப்புப் படைகளின் பிரதம அதிகாரி மற்றும் முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா அப்போதைய இலங்கை ஜனாதிபதி மற்றும் பாதுகாப்பு அமைச்சின் அங்கீகாரத்துடன் 2022 ஆம் ஆண்டு ஜூலை மாதம் கொழும்பு பாதுகாப்பு மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டிருந்தார் என்பதை மேலும் வலியுறுத்துகிறது - என்றுள்ளது. (ஐ)

# சிறுமி பாலியல் துஷ்பிரயோகம் இளைஞருக்கு விளக்கமறியல்!

கொழும்பு, ஏப். 27

15 வயது சிறுமி ஒருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்தார் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட நபரை எதிர்வரும் 2ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மினுவாங் கொடை நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

முகநூல் ஊடாக 15 வயது சிறுமியுடன் தொடர்பை பேணிய இளைஞரே கைது செய்யப்பட்டவராவார்.

மாத்தறையைச் சேர்ந்த 22 வயதுடைய குறித்த இளைஞர், சிறுமியை பிறிதோர் இடத்தில் சந்தித்து அவர் தங்கியிருந்த வீட்டுக்கு அழைத்து சென்று பல நாட்கள் தங்கியிருந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில், மகள் இனந்தெரியாத இளைஞனுடன் வீடு ஒன்றில் தங்கியிருக்கிறார் என்று சிறுமியின் தாயாருக்குக் கிடைத்த தகவலின்பேரில் சிறுமியின் தாய் திவுலப்பிட்டி பொலிஸில் முறைப்பாடு செய்தார். இதையடுத்து, சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளான சிறுமி மருத்துவ பரிசோதனையின் பின்னர் தாயாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ஐ)

# ரயில் தடம் புரள்வு

கொழும்பு, ஏப். 27

கொழும்பு மருதானை ரயில் நிலையத்தின் 8 ஆவது நடைமேடையில் நேற்று புதன் கிழமை பகல் ரயில் ஒன்று தடம் புரண்டது.

இதன் காரணமாக களனிவெளி மார்க்கத்தில் ரயில் சேவைகள் சில மணி நேரம் சேவைகள் தாமதமடைந்தன. (ஐ)

# எக்ஸ்பிரஸ் கப்பல் விவகாரம் சிங்கப்பூரில் வழக்கு தாக்கல்!

கொழும்பு, ஏப். 27

எக்ஸ்பிரஸ் பேர்ள் அனர்த்தத்தின் கப்பல் மூலம் இலங்கை கடலில் ஏறபட்ட பாதிப்புகளுக்கு இழப்பீட்டை கோரும் வழக்கை இலங்கை அரசாங்கம் சிங்கப்பூர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது.

சட்டமாஅதிபர் சஞ்சய் ராஜரட்ணம் இதனை உறுதி செய்துள்ளார். சிங்கப்பூரில் உள்ள சட்டநிறுவனமொன்றின் ஊடாக இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இழப்பீட்டு தொகை குறித்து நீதிமன்றத்திற்கு எதிர்காலத்தில் அறிவிக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார். (அ)






# அம்பாறை மாவட்டத்தில் ஹர்த்தால் தோல்வியாம்!

## கூறுகிறது ஐக்கிய காங்கிரஸ் கட்சி

நிந்தவூர், ஏப். 27

தமிழ், முஸ்லிம் கட்சிகள் இணைந்து அழைப்பு விடுத்த ஹர்த்தால் கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் பாரிய தோல்வியை கண்டுள்ளது என ஐக்கிய காங்கிரஸ் கட்சி தெரிவித்துள்ளது.

இது பற்றி ஐக்கிய காங்கிரஸ் கட்சி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

வடக்கு கிழக்கில் ஹர்த்தால் அனுஷ்டிக்கும்படி ஏழு தமிழ் கட்சிகள் கோரிக்கை விடுத்திருந்தன. இந்த ஹர்த்தாலுக்கு ரவூப் ஹக்கீமின் முஸ்லிம் காங்கிரஸ், ரிசாத் பதொயுதீனின் மக்கள் காங்கிரஸ், மனோ கணேசன் போன்றோர் ஆதரவு தெரிவித்திருந்தனர். ஆனாலும் இந்த ஹர்த்தால் தேவையற்றது என்றும் இது மக்களை ஏமாற்றி தங்கள் சொகுசு வாழ்க்கையை பலப்படுத்த முயலும் சுயநல கட்சிகளின் கோரிக்கை என்றும், கிழக்கில் அபகரிக்கப்பட்டுள்ள முஸ்லிம்களின் காணிகளை விடுவிக்காதவரை ஹர்த்தாலுக்கு ஒத்துழைக்க முடியாது என்றும் ஐக்கிய காங்கிரஸ் கட்சி மட்டுமே கூறியது.

தமிழ், முஸ்லிம் கட்சிகளின் கோரிக்கையை அம்பாறை மாவட்ட தமிழ் பேசும் மக்கள் குப்பையில் தூக்கி போட்டுள்ளனர். கல்முனை பஸார், கல்முனை சந்தை உட்பட பாண்டிருப்பு மற்றும் கல்முனை தமிழ் பகுதி, காரைதீவு என பல இடங்களிலும் வழமை போல் கடைகள் திறக்கப்பட்டு இயங்கியதை காண்கிறோம்.

இதன் மூலம் தமிழ், முஸ்லிம் கட்சிகள் தம்மை ஏமாற்றி அவர்கள் சொகுசு வாழ்விலும் சொகுசுப் பயணங்களிலும் ஈடுபடுவதற்காகவே இவ்வாறு மக்களை உசுப்பேற்றுகிறார்கள் என்பதை கிழக்கு மக்கள் புரிந்து கொண்டுள்ளனர்.

எம்.பிக்கள் தமது சம்பளங்களை குறைவின்றி பெறவேண்டும், ஹர்த்தால் செய்து பொது மக்கள் மட்டும் பட்டினி கிடக்க வேண்டுமா என மக்கள் புரிந்து கொண்டுள்ளனர்.

தமிழ் கட்சிகளும் முஸ்லிம் கட்சிகளும் இவ்வாறு மக்களை உசுப்பேற்றுவதில்தான் ஒற்றுமைப்படுகின்றார்களே தவிர, முஸ்லிம் மக்களின் பிரச்னைகளை தீர்ப்பதற்கு ஒருபோதும் ஒற்றுமைப்படுவதில்லை-என்றுள்ளது.

(அ-06)

# மணிக்கோபுர கலச அபிஷேகம்!



அக்கரைப்பற்று, ஏப். 27

திருக்கோவில் விநாயகபுரம் முத்துமாரியம்மன் ஆலய தூபி கலச அபிஷேகம் கடந்த செவ்வாய்க்கிழமை கோலாகலமாக நடைபெற்றது.

சங்காபிஷேக பிரதம குரு சிவசிறி ஆறுமுக கிருபாகரக் குழுக்கள் தலைமையில் நடைபெற்ற இந்த திருவிழாவில் சங்காபிஷேகம் மற்றும் ஸ்தூபி கலச அபிஷேகம் சிறப்பாக இடம் பெற்றது.

(அ)

# கல்முனை பிரதேசத்துக்கு புதிதாக 30 வைத்தியர்கள்

அக்கரைப்பற்று, ஏப். 27

**புதிதாக நியமனம் பெற்ற வைத்தியர்களுக்கான அறிமுக நிகழ்வும் சேவை நிலையங்களுக்கான கடிதங்கள் வழங்கும் நிகழ்வும், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.**

பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம் ரிபாஸின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதிப் பணிப்பாளர், பிரிவுத் தலைவர்கள், வைத்திய அத்தியட்சகர்கள், அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பிரதிநிதிகள் பங்குபற்றியதுடன், தத்தமது பிரிவு தொடர்பான விவரங்களையும் பணிமனை மற்றும் வைத்தியசாலைகளில் முன்னெடுக்கப்படுகின்ற செயற்றிட்டங்கள் தொடர்பான விவரங்களையும் வழங்கினர்.

இதன்போது உரையாற்றிய பணிப்பாளர், வைத்தியசாலையில் பொதுமக்கள் முறைப்பாடு இன்றி வைத்தியர்கள் எவ்வாறு சேவையை வழங்கவேண்டும் என்பது பற்றி வலியுறுத்தியதுடன், பிரிவு தலைவர்களும் தத்தமது பிரிவுகளினால் முன்னெடுக்கப்படுகின்ற சேவை தொடர்பான விவரங்களையும் தாம் எதிர்நோக்குகின்ற சவால்களுக்கு உங்களின் ஒத்துழைப்பும் பங்களிப்பும் எவ்வாறு அமையவேண்டும் என்பது தொடர்பிலும் தமது கருத்துகளை வழங்கினார்.

(அ)

# சாய்ந்தமருது ஜீ.எம்.எம்.எஸ். பாடசாலை வித்தியாரம்பம்

அக்கரைப்பற்று, ஏப். 27

சாய்ந்தமருது அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையின் தரம் ஒன்றுக்கு புதிதாக மாணவர்களை வரவேற்கும் வித்தியாரம்ப விழா நேற்று முன்தினம் கல்லூரியின் திறந்த வெளி அரங்கில் இடம்பெற்றது.

கல்லூரியின் அதிபர் எம்.ஐ. எம். இல்யாஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் கண் வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எம். அல்-அமீன் றிசாட் பிரதம அதிதியாக கலந்து கொண்டதோடு, பாடசாலையின் பழைய மாணவரும் அக்கரைப்பற்று வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறியியலாளருமான எம்.ஐ.எம்.ரியாஸ், ஆரம்ப கல்வி ஆசிரிய ஆலோசகர் ஏ சஹரூன் மற்றும் சாய்ந்தமருது மக்கள் வங்கியின் உப முகாமையாளர் ஏ.ஆர்.றிஸ்வான் முஹம்மட் ஆகியோர் நிகழ்வில் கௌரவ அதிதியாகவும் கலந்து கொண்டனர்.

தரம் இரண்டு மாணவர்களால் புதிய மாணவர்கள் மாலை அணிவித்து இனிப்பு வழங்கி வரவேற்கப்பட்டனர்.

பிரதி அதிபர், உதவி அதிபர் உட்பட பகுதித்தலைவர்கள், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்தி குழுவினர், பழைய மாணவர் சங்கத்தினர் மற்றும் நலன் விரும்பிகள் முதலாம் தரத்திற்கு புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்டுள்ள புதிய மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர். (அ)

# தனது மகளை துஷ்பிரயோகம் செய்த தந்தை கைது

அக்கரைப்பற்று, ஏப். 27

பொத்துவில் பொலிஸ் பிரிவிலுள்ள பிரதேசத்தில் தனது 14 வயதுடைய மகளை பாலியல் துஸ்பிரயோகம் செய்து வந்த பொலிஸ் சிவில் பாதுகாப்பு உத்தியோகராக கடைமையாற்றிவரும் தந்தையை நேற்று புதன்கிழமை கைது செய்துள்ளதாக பொத்துவில் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பொலிஸ் பிரிவிலுள்ள பிரதேசத்தில் 14 வயது சிறுமியை அவரது தந்தை கடந்த 3 வருடங்களாக பாலியல் துஷ்பிரயோகம் செய்து வந்த நிலையில், தேசிய சிறுவர் பாதுகாப்புச் சபையின் அவசர பிரிவான 1929 தொலைபேசி இலக்கத்துக்கு பாதிக்கப்பட்ட சிறுமி முறைப்பாடு செய்துள்ளார். இதனையடுத்து சிறுமியின் தந்தை கைது செய்யப்பட்டார். பாதிக்கப்பட்ட சிறுமி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

(அ)

# சம்மாந்துறையில் வித்தியாரம்ப விழா





நிந்தவூர், ஏப். 27

சம்மாந்துறை தாறுல் உலூம் வித்தியாலயத்தில் தரம் 1 மாணவர்களை அன்போடு வரவேற்கும் வித்தியாரம்ப விழா மிகக் கோலாகலமாக அதிபர் அஷ்ஷேஹ் எம்.ஐ.எம். கலீல் தலைமையில் பாடசாலை வளாகத்தில் நடைபெற்றது.

சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி எஸ்.எம். எஸ். உமர் மௌலனா பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்த இந்நிகழ்வில் விசேட அதிதிகளாக சம்மாந்துறை வலயக் கல்விப் பணிமனையின் கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளரும் சம்மாந்துறை கோட்டக் கல்விப் பணிப்பாளருமான ஏ. எல். மஜீட், திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ஏ.சி. நுஸ்ரத் நிலோபறா, கௌரவ அதிதியாக மௌலவி எம்.ஐ.எச். பஷீர், தாறுல் உலூம் வித்தியாலய ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

பாடசாலைக் கல்வியை ஆரம்பிக்கும் தரம் 1 மாணவர்களுக்கு இதன்போது அதிதிகளினால் கிரீடம் மற்றும் பதக்கங்கள் அணிவிக்கப்பட்டதோடு தரம் இரண்டு மாணவர்கள் அந்த மாணவர்களை வரவேற்றனர்.

மேலும் இதன்போது தரம் 1 மாணவர்களுக்கு அதிதிகளினால் மணல் தட்டில் எழுதப் பழக்கும் நிகழ்வும் இடம்பெற்றது.

அத்தோடு இம்மாணவர்களை மகிழ்விக்கும்வகையில் கலை கலாசார நிகழ்வுகளும் மேடையேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-06)

# நீதிமன்றக் கட்டடத் தொகுதிக்கு தீ வைப்பு; சந்தேகநபர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு

அக்கரைப்பற்று, ஏப். 27

அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றக் கட்டடத் தொகுதிக்கு தீ மூட்டியமை தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபர்களை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

அக்கரைப்பற்று நீதவான் எம்.எச்.எம்.ஹம்சா முன்னிலையில், மெய்நிகர் தொழில்நுட்பத்தினூடாக இந்த வழக்கு நேற்று முன் தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள் ளப்பட்டபோது, சந்தேகநபர்களை எதிர்வரும் மே மாதம் 02 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை துரிதப்படுத்துமாறு இதன்போது நீதவான் உத்தரவிட்டார்.

கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 21 ஆம் திகதி அதிகாலை 3 மணியளவில் அக்கரைப்பற்று நீதிமன்ற கட்டடத் தொகுதியில் தீ பரவியிருந்தது.

நீதிமன்றத்தின் வழக்குகளுடன் தொடர்புடைய அதிகளவிலான ஆவணங்கள் இதன்போது தீக்கிரையாக்கப்பட்டன.

சம்பவம் தொடர்பில் அக்கரைப்பற்றைச் சேர்ந்த 24 வயதான இருவரும், 18 வயதான ஒருவரும் கைது செய்யப்பட்டனர்.

இவர்களிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில், ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஒருவரிடம் பணம் பெற்றுக் கொண்டு, நீதிமன்ற கட்டடத் தொகுதிக்கு தீ வைத்தமை உறுதி செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

(அ)

# உக்ரைன் போரில் நவீன டாங்கியை பயன்படுத்த ஆரம்பித்துள்ள ரஷ்யா!

மொஸ்கோ, ஏப். 27

**உக்ரைன் போரில் ரஷ்யா தனது புதிய ரி-14 அர்மட்டா போர் டாங்கிகளைப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளது "ஆனால் அவை இன்னும் நேரடி தாக்குதல் நடவடிக்கைகளில் பங்கேற்கவில்லை" என்று ஆர்.ஐ.ஏ அரச செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.**




டாங்கிகள் அவற்றின் பக்கவாட்டில் கூடுதல் பாதுகாப்புடன் பொருத்தப்பட்டுள்ளன, உக்ரைனில் உள்ள பயிற்சி மைதானத்தில் "போர் ஒருங்கிணைப்புக்கு" உட்பட்டுள்ளன என்று ஆர்.ஐ.ஏ கடந்த செவ்வாயன்று இந்த விடயத்திற்கு நெருக்கமான பெயரிடப்படாத ஆதாரத்தை மேற்கோள் காட்டியது.

டாங்கிகள் நெடுஞ்சாலையில் அதிகபட்ச வேகம் மணிக்கு 80 கிலோமீற்றர் (50 மைல்) என்று நிறுவனம் கூறியது.

ரி-14 முதன்முதலில் 2015 இல் வெளியிடப்பட்டது. கிரெம்ளின் 2020 க்குள் 2,300 டாங்கிகளை உற்பத்தி செய்ய உத்தரவிட்டது. ஆனால் இது பின்னர் 2025 வரை நீட்டிக்கப்பட்டது என்று ரஷ்ய ஊடக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

நேட்டோ நாடுகள் டசின் கணக்கான அதிநவீன போர் டாங்கிகளை உக்ரைனுக்கு அனுப்புகின்றன. இந்த நடவடிக்கை மோதலின் ஆபத்தான விரிவாக்கம் என்று ரஷ்யா விவரித்துள்ளது. (அ)



# அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் மீண்டும் போட்டியிடும் ஜோ பைடன்

நியூயோர்க், ஏப். 27

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் 2024 ஆம் ஆண்டு நடைபெறவுள்ளது.

இதனை முன்னிட்டு ஜனாதிபதித் தேர்தலில் மீண்டும் போட்டியிட முடிவு செய்துள்ளேன் என ஜனாதிபதி ஜோ பைடன் கூறி வந்த நிலையில், அதற்கான அறிவிப்பை நேற்று உத்தியோகபூர்வமாக வெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிட்ட ருவிட்டர் பதிவில், ஒவ்வொரு தலைமுறைக்கும் ஜனநாயகத்திற்கு துணை நிற்க வேண்டிய தருணம் இருக்கும். அவர்கள் தங்களது அடிப்படை சுதந்திரத்திற்காக நிற்க வேண்டி இருக்கும். இது நம்முடையது என நான் நம்புகிறேன் என தெரிவித்துள்ளார்.

அதனாலேயே, நான் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் மீண்டும் போட்டியிட இருக்கிறேன். எங்களுடன் இணைந்து கொள்ளுங்கள். நாம் வேலையை முடிப்போம் என்று அதில் தெரிவித்துள்ளார். (அ)

# சூடானில் சிக்கியிருந்த 138 உக்ரேனியர்கள் மீட்பு!



கார்ட்டூம், ஏப். 27

சூடானில் சிக்கியிருந்த 138 பேர் மீட்கப்பட்டுள்ளதாக உக்ரைன் இராணுவ உளவுத்துறை தெரிவித்துள்ளது.

விமானப் போக்குவரத்து நிபுணர்களும் அவர்களுடைய குடும்பத்தினருமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இவர்களில் 35 பெண்கள், 12 குழந்தைகள் உள்ளடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், சூடானில் இருந்து வெளியேற்றப்பட்டவர்கள், எகிப்துக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

### காபூல் விமான நிலைய தாக்குதல்

# பின்னணியிலிருந்த ஐ.எஸ். தலைவர் தலிபான்களினால் கொல்லப்பட்டார்!

நியூயோர்க், ஏப். 27

காபூல் விமான நிலையத்துக்கு வெளியே நடந்த தற்கொலைக் குண்டுத் தாக்குதலின் பின்னணியில் இருந்த ஐ.எஸ். தலைவர் தலிபான்களால் கொல்லப்பட்டதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

2021 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் நடந்த குண்டுவெடிப்பில் 170 பொதுமக்கள் மற்றும் 13 அமெரிக்க வீரர்கள் கொல்லப்பட்டனர்.

ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்கப் படைகள் குழப்பமான முறையில் வெளியேறும் போது இந்த தாக்குதல் இடம்பெற்றது.

மேற்கத்திய அதிகாரிகள் ஒரு பெரிய தாக்குதலை எச்சரித்த சில மணிநேரங்களுக்குப் பின்னர் இந்த தற்கொலைக் குண்டுத் தாக்குதல் இடம்பெற்றது.

இந்த தாக்குதலில் பின்னணியில் இருந்த ஐ.எஸ். தலைவர் பல வாரங்களுக்கு முன்பு கொல்லப்பட்டபோதும் அவரது மரணத்தை தற்போதே உறுதிப்படுத்த முடிந்தது என்றும் அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அத்தோடு இவர் கொலை செய்யப்பட்ட ஐ.எஸ்.ஐ.எஸ் தலைவர் யார் என்ற அடையாளத்தை அமெரிக்க அதிகாரிகள் இன்னும் வெளியிடவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

# சந்திரனில் ஜப்பான் விண்கலம் தரையிறங்கும் முயற்சி தோல்வி



ரோக்கியோ, ஏப். 27

ஐ ஸ்பேஸ் நிறுவனம் 2010 இல் தொடங்கப்பட்டது. இந்த நிறுவனம் சந்திரனுக்கு வணிக ரீதியான போக்குவரத்து சேவைகளை அளிக்க திட்டமிட்டுள்ளது.

இதுவரை அமெரிக்கா, ரஷ்யா, சீனா ஆகிய நாடுகளின் விண்கலங்கள் மட்டும் சந்திரனில் வெற்றிகரமாக தரையிறங்கியுள்ளன.

இதற்கிடையே, ஐ ஸ்பேஸ் நிறுவனத்தின் ஹக்குடோ என்ற விணகலம் கடந்த டிசெம்பரில் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் பால்கன் 9 ரொக்கெட் மூலம் விண்ணில் ஏவப்பட்டது.

கடந்த மாதம் சந்திரனின் சுற்றுவட்டப் பாதையை சென்றடைந்த ஹக்குடோ விண்கலம், 100 கிலோமீற்றர் உயரத்தில் சந்திரனைச் சுற்றி வந்தது. இந்நிலையில், நேற்று முன்தினம் இரவு 10 மணி அளவில் சந்திரனில் தரையிறங்க உள்ளதாக தகவல் வெளியானது.

ஆனால் சந்திரனில் தரையிறங்குவதற்கு முன் அந்த விண்கலத்தின் தொடர்பு துண்டிக்கப்பட்டது. பின்னர் தரையிறங்கிய போது அந்த விண்கலம் மோதி நொறுங்கியது.

சந்திரனில் தரையிறக்கும் முயற்சி தோல்வியில் முடிந்துள்ளது என விண்கலத்தை செலுத்திய நிறுவனம் தெரிவித்துள்ளது.

# இந்திய வம்சாவளி தமிழருக்கு சிங்கப்பூரில் தூக்கு தண்டனை!

சிங்கப்பூர் சிற்றி, ஏப். 27

தங்கராஜூ சுப்பையா என்ற இந்திய வம்சாவளியைச் சேர்ந்த நபர் போதைப் பொருள் பயன்படுத்தியதற்காக கடந்த 2014 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்ட நிலையில் நேற்று அவருக்கு சிங்கப்பூரில் தூக்கு தண்டனை நிறைவேற்றப்பட்டது.

இரு போதைப்பொருள் கடத்தல் நபர்களுடன் இவருக்குத் தொடர்பு இருப்பது தெரியவந்த நிலையில், அவர்கள் வழியாக ஒரு கிலோ போதைப் பொருளை கடத்த திட்டமிட்டதாக அவர் மீது குற்றம்சாட்டப்பட்டு, 2018 ஆம் ஆண்டு உயர் நீதிமன்றம் அவருக்கு தூக்கு தண்டனை விதித்து தீர்ப்பு அளித்தது.

தங்கராஜூவுக்கு தூக்கு தண்டனை நேற்று நிறைவேற்றப்பட உள்ளதாக கடந்த சில நாட்களுக்கு முன்பு அவரது குடும்ப உறுப்பினர்களுக்கு அரசு தரப்பில் அனுப்பப்பட்ட கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டது.

இந்த தீர்ப்புக்கு சமூக செயற்பாட்டாளர்கள் தரப்பில் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டு வந்த நிலையில், தங்கராஜூசுப்பையா நேற்று தூக்கிலிடப்பட்டதாக அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து சிங்கப்பூர் சிறைச்சாலை சேவையின் செய்தித் தொடர்பாளர் கூறுகையில், "சிங்கப்பூரைச் சேர்ந்த தங்கராஜூ சுப்பையா (வயது-46), நேற்று சங்கி சிறை வளாகத்தில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது" என்று கூறினார்.



போதைப் பொருள் தடுப்புக்கான சட்டங்கள் சிங்கப்பூரில் கடுமையாக அமுல்படுத்தப்பட்டு வருகின்றன. போதைப் பொருள் வைத்திருக்கும் குற்றத்துக்கு சிங்கப்பூரில் கட்டாய மரண தண்டனையாகும். இந்த குற்றங்களுக்காக கடந்த ஆண்டில் மாத்திரம் 11 பேருக்கு தூக்கு தண்டனை நிறைவேற்றப்பட்டது.

போதைப்பொருள் குற்றத்துக்காக அந்நாட்டில் கடந்த ஆண்டு ஒக்டோபரில் தூக்கு தண்டனை நிறை வேற்றப்பட்ட நிலையில், 6 மாத இடைவெளிக்குப் பிறகு, தற்போது இந்திய வம்சாவளியான தங்கராஜூ சுப்பையாவுக்கு நேற்று மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது. (அ)

# திமுத், நிஷான் சதங்கள் இலங்கை அணி 357/1!





காலி, ஏப். 27

அயர்லாந்து அணிக்கு எதிராக தொடக்க வீரர்களாகக் களமிறங்கிய அணித் தலைவர் திமுத் கருணாரத்ன, நிஷான் மதுஷ்க சதங்கள் அடித்தனர். இதன் மூலம் இலங்கை ஒரு விக்கெட் இழப்புக்கு 357 ஓட்டங்களை குவித்தது. எனினும், நேற்றைய ஆட்டம் முடிவுக்கு வரமால் மழையால் தடைப்பட்டது. இன்று நான்காம் நாள் ஆட்டம் தொடரும்.

இரு டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடருக்காக அயர்லாந்து அணி இலங்கை வந்துள்ளது. முதல் டெஸ்ட் போட்டியில் இலங்கை அபார வெற்றி பெற்றது. இந்நிலையில் இரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது டெஸ்ட் கடந்த திங்கட்கிழமை காலியில் தொடங்கியது.

நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடியது அயர்லாந்து அணி சகல விக்கெட்களையும் இழந்து 492 ஓட்டங்களை குவித்தது.

நேற்று முன்தினம் இலங்கை தனது முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாட ஆரம்பித்தது. திமுத் கருணாரட்ண, நிஷான் மதுஷ்க இணை தொடக்கம் கொடுத்தனர். 81 ஓட்டங்களை அணி பெற்றிருந்தபோது இரண்டாம் நாள் ஆட்டம் முடிவுக்கு வந்தது. அப்போது திமுத் 39, நிஷான் 41 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தனர்.

தொடர்ந்து நேற்று மூன்றாம் நாள் ஆட்டம் ஆரம்பமானது. இருவரும் சிறப்பாக துடுப்பெடுத்தாடினர். திமுத் 61 பந்துகளில் அரைச்சதம் தொட்டார். அவரைத் தொடர்ந்து நிஷான் தனது முதல் கன்னி அரைச்சதத்தை 85 பந்துகளில் தொட்டார்.

தொடர்ந்து அதிரடியாக இருவரும் ஆடினர். திமுத் 116 பந்துகளில் தனது 16ஆவது சதத்தைப் பூர்த்தி செய்தார். இதைத் தொடர்ந்து 116 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது ஆட்டமிழந்தார். அவர் 15 பௌண்ட்ரிகளுடன் இந்த ஓட்டத்தை எட்டியிருந்தார்.

நிஷானுடன் இணைந்தார் குசல் மெண்டிஸ். இதைத் தொடர்ந்து நிஷான் மதுஷ்க தனது முதல் சதத்தைப் பதிவு செய்தார். மறுமுனையில் சற்று அதிரடியாகவே ஆடினார் குசல் மெண்டிஸ்.

இந்நிலையில் மழை குறுக்கிட்டதால் ஆட்டம் தடைப்பட்டது. அப்போது 77 ஓவர்கள் நிறைவில் இலங்கை ஒரு விக்கெட் இழப்புக்கு 357 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. அயர்லாந்து அணியை விட 135 ஓட்டங்கள் இலங்கை பின்தங்கியுள்ளது. நிஷான் மதுஷ்க 149 ஓட்டங்களுடனும் குசல் மெண்டிஸ் 83 ஓட்டங்களு டனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இன்று போட்டியின் நான்காம் நாள் ஆட்டமாகும். (ஐ)



# மும்பை அணிக்கு எதிராக குஜராத் எழுச்சி வெற்றி!

அஹமதாபாத், ஏப். 27

மும்பை இந்தியன்ஸ் அணிக்கு எதிரான ஆட்டத்தில் 55 ஓட்டங்கள் வித்தியாசத்தில் குஜராத் ரைட்டன்ஸ் அணி வெற்றிபெற்றுள்ளது.

208 ஓட்டங்கள் என்ற பெரிய இலக்கை துரத்திய மும்பை இந்தியன்ஸ் அணிக்கு தொடக்கம் சரியாக அமையவில்லை. 2ஆவது ஓவரிலேயே 2 ஓட்டங்களுக்கு நடையைக் கட்டினார் மும்பை அணித் தலைவர் ரோஹித் சர்மா.

மெதுவான இன்னிங்சை வெளிப்படுத்திய இஷான் கிஷனும் 13 ஓட்டங்களுக்கு விக்கெட்டாக இம்பேக்ட் வீரராக களமிறக்கப்பட்ட திலக் வர்மா, எந்த இம்பேக்ட்டும் காட்டாமல் 2 ஓட்டங்களில் வீழ்ந்தார்.

கமரூன் கிறீன் 3 சிக்ஸர்களுடன் 33 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழக்க மும்பை அணி 11 ஓவர்கள் முடிவதற்குள்ளாகவே 59 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்களை இழந்து தடுமாறியது. சூர்யகுமார் யாதவ் 23, ரிம் டேவிட் 0 என மும்பையின் முன்வரிசை வீரர்கள் எந்த தாக்கத்தையும் ஏற்படுத்த தவற, நேஹால் வதேரா அதிரடியாக விளையாடி 40 ஓட்டங்கள் சேர்த்து வெளியேறினார்.

அவரின் ஆட்டமிழப்புக்கு பின் சச்சினின் மகன் அர்ஜுன் துடுப்பெடுத்தாட வாய்ப்பு கிடைத்தது. அர்ஜுன் 9 பந்துகளில் 13 ஓட்டங்கள் சேர்த்து கடைசி ஓவரில் விக்கெட்டை இழந்தார். இறுதியில் மும்பை அணி 9 விக்கெட்களை இழந்து 152 ஓட்டங்களை மட்டுமே எடுத்து தோல்வி கண்டது. இதன்மூலம் குஜராத் அணி 55 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

குஜராத் தரப்பில் நூர் அகமது மற்றும் ரஷீத் கான் இணைந்து தங்கள் மாயாஜால சுழலால் மும்பையின் முன்னணி வீரர்களை ஆட்டமிழக்க செய்தனர். நூர் அகமது 3 விக்கெட்டும், ரஷீத் கான் மற்றும் மோஹித் சர்மா தலா இரண்டு விக்கெட்களையும் வீழ்த்தி அணியின் வெற்றிக்கு கைகொடுத்தனர்.

முன்னதாக, நாணயச் சுழற்சியில் மும்பை அணி பந்து வீச்சை தெரிவு செய்தது. குஜராத் அணியின் தொடக்க ஆட்டக்காரரான விருத்திமான் சஹா தொடக்கத்திலேயே 4 ஓட்டங்களுடன் கிளம்பினார். ஷுப்மன் கில் விளாசல் காட்ட, அவருக்கு ஹார்திக் பாண்ட்யா துணை நின்றார். ஹார்திக் பாண்ட்யாவை பியூஷ் சாவ்லா வெளியேற்ற, விஜய் சங்கர் களத்துக்கு வந்த சேர்ந்தார்.

34 பந்துகளில் 56 ஓட்டங்களைச் சேர்த்த ஷுப்மன் கில் ஆட்டமிழக்க, அடுத்த ஓவரில் விஜய் சங்கரும் 19 ஓட்டங்களில் பெவிலியன் திரும்பினார். 13 ஓவர்களில் 4 விக்கெட்டை இழந்த குஜராத் 103 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது. அடுத்து இணைப்பபாட்டம் அமைத்த அபினவ் மனோகர், டேவிட் மில்லர் மும்பை பந்துகளை வானத்தை நோக்கி பறக்கவிட்டனர். 3 சிக்ஸர்களை விளாசிய அபினவ் மனோகர் 42 ஓட்டங்களில் விக்கெட்டை இழந்தார்.

சிறப்பாக ஆடிய டேவிட் மில்லர் 46 ஓட்டங்களைச் சேர்த்துவிட்டு கிளம்ப, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர் முடிவில் 6 விக்கெட்களை இழந்த குஜராத் அணி 207 ஓட்டங்களை குவித்தது.

ராகுல் தெவாட்டியா 20 ஓட்டங்களுடனும், ரஷித் கான் 2 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

மும்பை அணி தரப்பில் பியூஸ் சாவ்லா 2 விக்கெட்களையும், அர்ஜுன் டென்டுல்கர், குமார் கார்த்திகேயா, ஜேசன் பெஹ்ரன்டோர்ஃப், ரிலே மெரிடித் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். (ஐ)

# ஆர்ச்சருக்கு மீண்டும் கையில் சத்திர சிகிச்சை!

மும்பை, ஏப். 27

இங்கிலாந்து மற்றும் மும்பை இந்தியன்ஸ் அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஜோப்ரா ஆர்ச்சர் முழங்கை பகுதியில் சிறிய அறுவை சிகிச்சைக்காக பெல்ஜியம் சென்றுள்ளார்.

நடப்பு ஐ. பி. எல். தொடரில் ஆர்ச்சர் மும்பை இந்தியன்ஸ் அணிக்காக 2 போட்டிகளில் விளையாடி 1 விக்கெட் மட்டுமே வீழ்த்தியுள்ளார். இந்தச் சூழலில் அவர் வலது முழங்கை பகுதியில் சிறிய அளவிலான அறுவை சிகிச்சைக்காக பெல்ஜியம் சென்றுள்ளார் என்று தெரிகிறது.

எனினும், அவர் ராஜஸ்தான் அணிக்கு எதிராக வரும் 30ஆம் திகதி நடைபெறும் போட்டியில் களம் திரும்புவார் என்று கூறப்படுகின்றது. (ஐ)





# இடையிலேயே தாயகம் திரும்புகிறார் மார்க் வூட்!

புதுடில்லி, ஏப். 27

ஐ. பி. எல். தொடரில் லக்னோ சுப்பர் ஜெயண்ட்ஸ் அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளரான இங்கிலாந்தின் மார்க் வூட் குழந்தை பிறப்பையொட்டி அடுத்த மாதம் தாயகம் செல்கிறார்.

வலது கை வேகப்பந்து வீச்சாளரான மார்க் வூட் இந்தத் தொடரில் லக்னோ அணிக்காக 4 போட்டிகளில் விளையாடி 11 விக்கெட்களை வீழ்த்தியுள்ளார். ஓவருக்கு சராசரியாக 8.12 ஓட்டங்களை வழங்கியுள்ளார்.

உடல் நலக்குறைவு காரணமாக கடந்த இரு போட்டிகளில் அவர் களமிறங்கவில்லை.

இந்நிலையில், மார்க் வூட்டின் மனைவி சாரா 2ஆவது குழந்தையை மே மாத இறுதியில் பெற்றெடுக்க உள்ளார். இதனால் மார்க் வூட் இன்னும் சில வாரங்களில் தாயகம் புறப்பட்டுச் செல்ல முடிவு செய்துள்ளார். இதனால் அவர், ஐ. பி. எல். தொடரின் இறுதிப்பகுதியில் பங்கேற்க முடியாத நிலை உருவாகியுள்ளது. (ஐ)

# கல்வி முறையை சீரழிக்க ஒருபோதும் இடமளியேன்!

## ஜனாதிபதி ரணில் திட்டவட்டம்

கொழும்பு, ஏப். 27

**நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ நாட்டின் கல்விமுறையை சீர்குலைக்கும் எந்தவொரு முயற்சிக்கும் இடமளிக்கப்படமாட்டாது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**

தேவைப்பட்டால், அத்த கைய நடத்தைக்கு தீர்வு காண புதிய சட்டம் கொண்டு வரப்படும் என்றும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் - நாட்டின் எதிர்காலம் கல்வியினால் தீர்மானிக்கப்படுகின்றது, 21ஆம் நூற்றாண்டுக்கு உகந்த கல்வியை பிள்ளைகளுக்கு வழங்குவதற்கு அனைவரும் தங்களை அர்ப்பணிக்கவேண்டும்.

2048 ஆம் ஆண்டளவில் அபிவிருத்தியடைந்த இலங்கையை கட்டியெழுப்பும் அரசாங்கத்தின் வேலைத்திட்டத்தில் கல்வி தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. 2035 ஆம் ஆண்டளவில் நாட்டில் புதிய கல்வி முறையை உருவாக்குவதே அரசாங்கத்தின் அபிலாஷையாகும்

எதிர்காலத்தில் கல்வியை நவீனமயப்படுத்துவதற்கு அரசாங்கம் பெருமளவு பணத்தைச் செலவிடத் தயாராக இருக்கின்றது. நாட்டின் மிக முக்கியமான தேசிய வளம் இளைஞர்கள், அவர்களுக்கு முறையான கல்வியை வழங்குவதன் மூலம் இலங்கையை இந்து சமுத்திரத்தில் பிரதான கேந்திர மையமாக மாற்ற முடியும்.

காலநிலை மாற்றத்தை ஒரு பாடமாக மாற்றவும், புதிய வரலாற்று நிறுவனத்தை நிறுவவும் அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. பாடசாலை பாடத்திட்டம் மற்றும் பல்கலைக்கழக கல்வியில் புதிய பாடங்கள் அறிமுகப்படுத்தப்படும். அத்தோடு அனைத்து மாணவர்களும் அறிவியல் மற்றும் கலை பாடங்களை படிக்க வேண்டும்.

மேலும், புவியியல், வரலாறு போன்ற பாடங்களை அனைவரும் புரிந்து கொள்ளவேண்டும். முதலில் உயர்தரப் பாடங்கள் நடைபெறும் அனைத்துப் பாடசாலைகளும் இணையத்துடன் இணைக்கப்படும். அதன்பின்னர் க.பொ.த சாதாரண தரம் வரை கல்வி கற்பிக்கப்படும்



அனைத்துப் பாடசாலைகளுக்கும் இணைய வசதி வழங்கப்படும்.

எதிர்வரும் 10 வருடங்களுக்குள் அனைத்துப் பாடசாலைகளிலும் ஆங்கிலக் கல்வியை வழங்குவதற்கும் ஆசிரியர்களை ஆட்சேர்ப்பில் ஆங்கிலத்தை கட்டாயமாக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்-என்றார்.

# என்னை சிறையில் அடைக்க முனைப்பு

## மைத்திரிபால கவலை

கொழும்பு, ஏப். 27

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பாக ஏற்கனவே பலர் கைது செய்யப்பட்டுள்ள போதும் தன்னையும் குறி வைப்பதை ஏற்றுகொள்ள முடியாது என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- சம்பந்தப்பட்ட சந்தேக நபர்கள் ஏற்கனவே கைது செய்யப்பட்டிருந்தாலும், தாக்குதல்களின் குற்றவாளியாக என்னை காண்பது நியாயமற்றது.

2019 மே 21 ஆம் திகதி இடம்பெற்ற தொடர் குண்டுத் தாக்குதல்கள் தொடர்பான



விசாரணைகள் இன்னமும் இடம்பெற்று வருகின்றது.

இருந்தபோதும் தாக்குதல்கள் தொடர்பாக என்னை சிறையில் அடைக்க அல்லது தூக்கிலிடவே கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை விரும்புகின்றார். உரிய விசாரணைகள் முடிவடையாமல் அவர் இதைச் செய்ய முயற்சிக்கிறார்-என்றார். (அ)

# மாணவரின் எதிர்காலத்தை சீரழிக்கும் ஆசிரியர்கள் மீது நடவடிக்கை தேவை!

## நிமல் லான்சா எம். பி.

கொழும்பு, ஏப். 27

விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கைகளை புறக்கணித்து மாணவர்களின் எதிர்காலத்தை சீரழிக்கும் இராட்சச ஆசிரியர்கள் தொடர்பில் ஜனாதிபதியும் நீதி அமைச்சரும் கடுமையான தீர்மானங்களை எடுக்க வேண்டும் என்று சிறீ லங்கா பொதுஜன பெரமுன சுயாதீன உறுப்பினர் நிமல் லான்சா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன் தினம் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், சில ஆசிரியர்கள் அடிப்படைவாதிகள் மற்றும் பயங்கரவாதிகளிடம் சிக்கி பாடசாலை மாணவர்கள் தொடர்பில் சிந்திக்காது பிள்ளைகளின் எதிர்காலத்தை சீர்குலைக்கின்றனர்.

கொரோனாவால் ஒன்றரை வருடங்கள் கற்கை நடவடிக்கை இன்றி இருந்து மீண்டும் பாட



சாலை ஆரம்பிக்கப்படும் போது ஸ்டாலின் போன்றோர் சம்பள அதிகரிப்பு கோரி போராட்டம் நடத்தினர்.

இவர்களுக்கு 5ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டது. பரீட்சை நடத்தும்போதும் போராட்டம் நடத்தினர். பின்னர் விடைத்தாள் திருத்தும் போதும் போராட்டம் நடத்துகின்றனர். இவர்களால் மாணவர்களின் எதிர்காலமே பாதிக்கப்படுகின்றது.

அப்பாவி மாணவர்களுக்காக கதைப்பதற்கு எவரும் இல்லை. தொழிற்சங்க தலைவர்களே நிலைமைக்கு காரணம். இவர்கள் ஆசிரியர்களை திசை திருப்பி மாணவர்களின் எதிர்காலத்தை பின்னால் தள்ளி சீரழிக்கின்றனர்.

இவர்கள் ஆர்ப்பாட்டத்தையே செய்துகொண்டிருந்தால் நாட்டின் நிலை என்னவாகும் இதனால் ஜனாதிபதி தீர்மானமொன்றை எடுக்க வேண்டும்.

இவ்வாறான போராட்டங்கள் அப்பாவி ஏழை மக்களின் பிள்ளைகளுக்கே பாதிப்பாக அமையும். இதனால் இவர்களுக்கு எதிராக தீர்மானங்களை எடுக்க வேண்டும். பெற்றோர்கள் இவர்களுக்கு எதிராக வீதிக்கிறங்கவேண்டும்.

அவர்களின் நடவடிக்கை தொடர்பாக ஜனாதிபதி, நீதி அமைச்சர் ஆகியோர் கவனம் செலுத்த வேண்டும். மாணவர்களின் எதிர்காலத்தை சீரழிப்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார்.

# சீரற்ற வானிலை காரணமாக 3 விமானங்கள் மத்தளவுக்கு!

கொழும்பு, ஏப். 27

சீரற்ற வானிலை காரணமாக, கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வந்த 3 விமானங்கள், மத்தள விமான நிலையத்துக்கு திருப்பி அனுப்பி வைக்கப்பட்டன.

மாலைதீவிலிருந்து பயணித்த, சிறிலங்கன் விமான சேவைக்கு சொந்தமான யு.எல் 116 என்ற விமானமும், சென்னையில் இருந்து பயணித்த யூ.எல். 128 என்ற விமானமும் மற்றுமொரு விமானமும் மத்தளவுக்கு திருப்பி அனுப்பி வைக்கப்பட்டன.

இந்த நிலையில், கட்டுநாயக்க விமான நிலையப் பகுதியில், வானிலை சீரானதை அடுத்து, குறித்த விமானங்களின் பயணிகள் அனைவரும், மீளவும் கட்டுநாயக்கவுக்கு அழைத்து வரப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (அ)

# உணவுப் பணவீக்க நாடுகள் பட்டியலில் இலங்கை நீக்கம்!

கொழும்பு, ஏப். 26

உணவுப் பொருட்களின் விலையேற்றம் அதிகம் உள்ள 10 உலக நாடுகளின் பட்டியலில் இருந்து இலங்கை நீக்கப்பட்டுள்ளது.

உலக வங்கியால் தொகுக்கப்பட்ட பட்டியலில் பல வாரங்களாக தொடர்ந்து இடம்பெற்று வந்த இலங்கை, புதிய தரவில் நீக்கப்பட்டுள்ளது.

பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதற்கும் உணவுப் பாதுகாப்பு மற்றும் பண வீக்கம் ஆகியவற்றில் கவனம் செலுத்துவதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருந்தது.

இதன் காரணமாக இலங்கை அதிக உணவுப் பணவீக்கம் உள்ள நாடுகளின் பட்டியலில் இல்லை என உலக வங்கி குறிப்பிட்டுள்ளது.

உலக வங்கி தனது சமீபத்திய மதிப்பீட்டில், லெபனான் நாட்டிலேயே அதிக உணவு விலை பணவீக்கம் காணப்படுவதாக கூறியுள்ளது.

261 சதவீதத்துடன் லெபனான் தரவரிசையில் முதல் இடத்தைப் பிடித்துள்ளது. மேலும் சிம்பாப்வே மற்றும் அர்ஜென்ரீனா முறையே இரண்டாவது மற்றும் மூன்றாவது இடத்தில் உள்ளன. (அ)

# அரச அலுவலர் குறுகிய காலம் துயரங்களை சகிக்கவேண்டும்

## கோருகின்றார் அமைச்சரவைப் பேச்சாளர்

கொழும்பு, ஏப். 27

அரச உத்தியோகத்தர்கள் குறுகிய காலத்துக்கு துயரங்களை சகித்துக் கொண்டேனும் பொருளாதார முன்னேற்றத்துக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- நாணய நிதியத்தின் ஆரம்ப நிபந்தனைகளில் நிறைவேற்றப்பட வேண்டிய விடயங்கள் பல உள்ளன. அவற்றில் பிரதானமானது சர்வதேச கடன்களுக்கான வட்டியை செலுத்தக்கூடிய திட்டமிடலைச் சமர்ப்பிப்பதாகும்.

இதன் மூலம் பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றம் ஏற்படும் பட்சத்தில் அரச உத்தியோகத்தர்களுக்கு வரி சலுகை வழங்குவது தொடர்பில் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க முடியும்.

எனினும் ஒப்பந்தத்தின்படி செயற்பட்டால் மாத்திரமே பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க முடியும். இதற்கு முன்னர் 16 சந்தர்ப்பங்களில் நாம் சர்வதேச நாணய நிதியத்தை ஏமாற்றியுள்ளோம்.

இம்முறை அவ்வாறு ஏமாற்ற முடியாது. சர்வதேச மட்டத்தில் பொருளாதார ரீதியில் நம்பிக்கையை உருவாக்குவதற்கு ஒப்பந்தத்திற்கமைய செயற்பட வேண்டும்.

எனவே துன்பங்களை சகித்துக் கொண்டேனும் இவற்றுக்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்-என்றார். (அ)

## யாழை..

என்ற சகோதரர்களே உயிரிழந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

யாழ்ப்பாணத்தை இந்த சகோதரர்கள், உறவினர் ஒருவரின் மரணச் சடங்கில் பங்கேற்பதற்காக மல்லாவிக்கு வந்துள்ளனர். வவுனிக்குளம் குளத்தில் இருவரும் நீராடியபோது, தம்பியார் துருசு பகுதிக்குள் அகப்பட்டு மூழ்கியுள்ளார். அவரைக் காப்பாற்றுவதற்கு அண்ணன் முயன்றுள்ளார். இதன்போதே இருவரும் நீரில் மூழ்கி உயிரிழந்தனர்.

இருவரின் உடலங்களும் மீட்கப்பட்டு மல்லாவி ஆதார மருத்துவ மனையில் பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக் கப்பட்டன. (ஐ)

## சட்டம்...

விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும், பொருளாதார பாதிப்புக்கு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உட்பட பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கம் பொறுப்புக் கூற வேண்டும். சுதந்திரத்துக்கு பின்னரான காலப்பகுதியில் இருந்து ஆட்சியில் இருந்த சகல அரசாங்கங்களும் பொருளாதார பாதிப்புக்கு பொறுப்புக் கூற வேண்டும்.

நல்லாட்சி அரசாங்கம் தேசிய உற்பத்தி களை புறக்கணித்து சகல பொருட்களையும் இறக்குமதி செய்ததை மறந்து விடக்கூடாது. தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் எவ்வித பிரச்னைகளும் இல்லாத சூழலில் நல்லாட்சி அரசாங்கம் அரச முறை கடன்களை வரையறையில்லாமல் பெற்றுக்கொண்டது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷ எடுத்த ஒரு சில தீர்மானங்கள் பொருளாதார பாதிப்பை தீவிரப் படுத்தியது. வெளிநாட்டு கடன்களை பெறுவது இல்லை என்ற கொள்கையை முன்னிலைப்படுத்தி அவர் செயல்பட்டார். கோவிட் பெருந்தொற்று தாக்கம் பொருளாதார பாதிப்பை தீவிரப்படுத்தியது. நாட்டின் பொருளாதார நிலையின் உண்மை தன்மையை கோட்டபய ராஜபக்ஷ நாட்டு மக்களுக்கு எடுத்துரைத்துரைத்திருந்தால் யுத்த காலத்தில் ஒத்துழைப்பு வழங்கியதை போல் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு மக்கள் ஒத்துழைப்பு வழங்கியிருப்பார்கள்.

பொருளாதார விவகாரத்தில் மக்களுக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் பெரும் வேறுபாடு காணப்பட்டது. இதனை அரசியல் தரப்பினர் தமக்கு சாதகமாக பயன்படுத்தி இராச்சியத்துக்கு எதிரான போராட்டத்தை தோற்றுவித்தார்கள்.

மறுபுறம் நாட்டின் சட்டம் மற்றும் ஒழுங்கை அப்போதைய ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷ உறுதிப்படுத்தவில்லை. எவர் வேண்டுமானாலும் போராட்டத்தில் ஈடுபடலாம், யாரும் யாரையும் தாக்கலாம், வீடுகளுக்கு தீ வைக்கலாம், என்ற நிலை காணப்பட்டது.

பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தை தோற்றுவித்த ஆதரவாளர்கள் பேர வாவியில் தள்ளப்பட்டு தாக்கப்பட்டார்கள். ஜனநாயக போராட்டம் என்று குறிப்பிட்டுக் கொண்டு இடம்பெற்ற பயங்கரவாத செயல்பாடுகளுக்கு எதிராக கோட்டாபய ராஜபக்ஷ உரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை.

பொருளாதார முன்னேற்றத்துக்கு தடையாக போராட்டத்தில் ஈடுபடும் தரப்பினரின் சொத்துக்கள் அரசுடமையாக்கப்பட வேண்டும். பல இலட்சம் சம்பளம் பெறும் தரப்பினரால் ஏன் வரி செலுத்த முடியாது. கடுமையான தீர்மானங்களை செயல்படுத்தினால் மாத்திரம்தான் நடுத்தர மக்களுக்கு நிலையான முன்னேற்றத்தை ஏற்படுத்திக் கொடுக்க முடியும் - என்றார். (ஐ)

## மீண்டும்...

பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2019 பிற்பகுதியில் சீனாவிலிருந்து பரவ ஆரம்பித்த கோவிட் தொற்று சர்வதேசம் முழுவதும் பரவியது. இலங்கையில் 2020 மார்ச் முதல் 6 இலட்சத்து 72 ஆயிரத்து 143 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டிருந்தனர். இதில், 16 ஆயிரத்து 800இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர்.

எனினும், கட்டுப்பாடுகள் மற்றும் கோவிட் தடுப்பூசி ஏற்றப்பட்டமையை தொடர்ந்து தொற்றுப்பரவல் கட்டுப்பாட்டுக்குள் வந்தது. இந்த நிலையிலேயே நாட்டில் மீண்டும் தொற்றுப் பரவ ஆரம்பித்துள்ளது.

இதனிடையே, அண்மையில் யாழ்ப்பாணத்தில் கோவிட் தொற்றால் ஐவர் பாதிக்கப்பட்டனர். இதில் ஒருவர் உயிரிழந்தார். எனினும், இது குறித்து உத்தியோகபூர்வமாக அரசாங்கம் சார்பில் தகவல்களை வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஈ.பி.எவ்....

இருந்து மீண்டு விட்டோம் என ஜனாதிபதி குறிப்பிடுவது நாட்டு மக்களை ஏமாற்றும் பிறிதொரு செயல்பாடாகும்.

நாணய நிதியத்தின் ஒரு சில சாதக காரணிகளை மாத்திரம் பெருமையாக குறிப்பிடும் தரப்பினர் கடுமையான நிபந்தனைகளை செயல்படுத்துவதால் ஏற்படும் பாதிப்புகள் தொடர்பில் குறிப்பிடாமல் இருப்பது பிரதான குறைபாடாகும்.

கடன் மறுசீரமைப்புக்கு பிரதான நிலை கடன் வழங்குநர்கள் இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் 14 சதவீத கடன்களை இரத்து செய்ய இணக்கப் பாடு எட்டப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடுவது அடிப்படையற்றது. கடன் மறுசீரமைப்புக்கு இதுவரை உறுதியான இணக்கப்பாடு எட்டப்படவில்லை. சர்வதேச கடன்களை மறுசீரமைக்க வேண்டுமாயின் தேசிய கடன்களையும் மறுசீரமைக்க வேண்டும் என பிரதான நிலை கடன் வழங்குநர்கள் அரசாங்கத்திடம் குறிப்பிட்டுள்ளார்கள்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பின் இரண்டாவது தவணை நிதியை பெற்றுக்கொள்ள தேசிய கடன்களை மறுசீரமைக்க அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது. தேசிய கடன் மறுசீரமைக்கப்பட்டால் வங்கி கட்டமைப்பு பாதிக்கப்படும். இதனால் சாதாரண வைப்பாளர்கள், முதலீட்டாளர்கள் பாதிக்கப்படுவார்கள். ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவை கூட இரத்து செய்யப்படும். ஆகவே நாட்டு மக்களுக்கு உண்மையை அரசாங்கம் பகிரங்கப்படுத்த வேண்டும் - என்றார். (ஐ)

## கச்சதீவில்...

இவ்விடயத்தை கடற்படையின் உயர் அதிகாரிகள் ஆயர் இல்லத்துக்கு அறிவித்துள்ளார்கள். அங்கு அமைக்கப்பட்டிருந்த புத்தர் சிலை அகற்றப்பட்டு கச்சதீவுக்கு வெளியே கொண்டுசெல்லப்பட்டு விட்டதாக அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

கச்சதீவில் புத்தர் சிலை நிறுவப்பட்டுள்ளதாகவும் இவ்விடயத்தில் தாங்கள் (அரச அதிபர்) கவனமெடுத்து கச்சதீவின் பாரம்பரியமும் தனித்துவமும் பேணப் பட ஆவன செய்யுமாறும் கேட்டு கடந்த மார்ச் 27 ஆம் திகதி வேண்டுகோள் விடுத்திருந்தோம். இதற்கமைய தாங்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளுக்காகவும் ஒத்துழைப்புக்காகவும் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்விடயத்தை அமைதியான முறையில் தீர்த்துவைக்க ஒத்துழைத்த கடற்படை உயர் அதிகாரிகளுக்கும் மற்றும் கச்சதீவின் பாரம்பரியமும் தனித்துவமும் பேணப்பட குரல் கொடுத்த அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிக்கின்றோம் - என்றுள்ளது. (ஐ)

## நாட்டை...

முறையில் நடைமுறைப்படுத்தப்படாமையால் தோல்வியடைந்ததை ஜனாதிபதி நினைவுகூர்ந்தார். சர்வதேச நாணய நிதியத்துடன் ஒப்பந்தம் செய்வதை தவிர வேறு மாற்றுவழி நாட்டில் இருக்கவில்லையென்பதால் தற்போதைய பலவீனங்களை ஒதுக்கி புதிய திட்டத்தில் 17ஆவது தடவையாக இணைய வேண்டியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தேசிய கடனை மறுசீரமைப்பதில் ஊழியர் சேமலாப நிதியத்தின் உறுப்பினர்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது என வலியுறுத்திய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, நிதி ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதற்கும் குறைந்த வருமானம் பெறும் மக்களின் பாதுகாப்புக்கான சமூக பாதுகாப்பு வலையமைப்பை முன்னெடுக்கவும் நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவித்தார்.

நாட்டின் உள்நாட்டுக் கடனை மறுசீரமைக்க வேண்டும் என்று வெளிநாட்டு கடனாளிகள் ஆலோசனை வழங்கியுள்ளனர். எனினும் இது குறித்து இறுதித் தீர்மானம் இதுவரை எடுக்கவில்லை. எவ்வாறாயினும் வெளிநாட்டு கடனாளிகளுடன் உரையாடல்களை ஆரம் பிக்கும்போது உள்நாட்டுக் கடன்களை மறுசீரமைப்பது தொடர்பில் தீர்மானம் எடுக்க வேண்டும்.

மேலும், உள்நாட்டு கடன்களை மறுசீரமைப்பதால் சிலர் கூறுவது போல் உள்ளூர் வங்கிகள் மற்றும் பங்குச் சந்தைகளில் எந்த நெருக்கடியும் ஏற்படாது.

ஊழியர் சேமலாப நிதிய உறுப்பினர்களுக்கும் எந்த அநீதியும் ஏற்படாமல் இருப்பதை அரசாங்கம் உறுதி செய்யும் என்றும் அவர் கூறினார்.

இலங்கை வெளிநாட்டு கடனாளிகளுடன் தனித்தனியாக கலந்துரையாடல்களை ஆரம்பிக்கும். அங்கு பாரிஸ் கிளப் மற்றும் இந்தியாவுடன் கலந்துரையாடல்கள் ஒரே மேடையில் நடைபெறும் மற்றும் சீனாவுடன் தனியான கலந்துரையாடல் நடைபெறும் என்றும் தெரிவித்தார்.

தவிர, சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கை தவிர எமக்கு வேறு எந்த மாற்றுவழியும் இல்லை. மாற்றுவழிகள் எதுவும் முன்மொழியப்படவும் இல்லை. வேறு மாற்றுவழி இல்லாவிட்டால் இதனை நாம் அங்கீகரிக்க வேண்டும். அனைவரும் ஒன்றிணைந்து இதனை அங்கீகரிக்க வேண்டும் என்ற வேண்டுகோளை முன்வைக்கிறேன் - என்றார்.

தொடர்ந்து, ஐ. எம். எவ். 6 மாதங்களுக்கு ஒரு தடவையே எமது நாட்டுக்கு வருகிறது. குறைபாடுகள் இருந்தால் பேச்சு நடத்தித் தீர்க்கலாம்.

தேசிய பேரவை போன்று பல குழுக்கள் உள்ளன. முழு பாராளுமன்றத்தையும் அரசாங்கமாக மாற்ற வேண்டும். அதற்காக நாம் உழைக்க வேண்டும். இது தொடர்பில் பல கருத்துகள் இருக்கலாம். அனைவரும் ஒன்றிணைய வேண்டும். அதற்காக அனைவரும் ஒன்றுபட வேண்டும். பல்வேறு கருத்துகள் இருக்கலாம். அனைவரும் இந்த திட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

2048 ஆம் ஆண்டாகும் போது நாம் நாட்டை கட்டியெழுப்ப வேண்டும். இன்றேல் நாம் இளைஞர்களை காட்டிக் கொடுத்தவர்களாக ஆகியிருப்போம். அவர்களின் எதிர்காலத்தை நாசமாக்கியதாக ஆகிவிடும் இளைஞர்கள் குறித்து சிந்திக்க வேண்டும். அதிகார மையம் பற்றி மாத்திரம் சிந்திக்கக் கூடாது. இதனை நாம் முன்னெடுக்கத் தவறினால் ஓரிரு ஆண்டுகளில் எங்கள் எவருக் கும் வாழமுடியாத நிலை ஏற்படும். எனவே, அனைவரும் இணைய வேண் டும். 2048 ஆம் ஆண்டு வரையான கொள்கை தயாரிக்கப்பட்டுள்ளது. முதல் 5 வருடங்களுக்கான திட்டத்தை செயல்படுத்த ஒத்துழைப்பு வழங்க வேண்டும் - என்றும் கூறினார்.

# நெடுந்தீவு படுகொலை: காயமடைந்த நாயும் உயிரிழந்தது

யாழ்ப்பாணம், ஏப். 27

நெடுந்தீவில் ஐவர் படுகொலையின் போது கொலையாளியால் காயங்களுக்கு உள்ளாக்கப்பட்ட நாயும் உயிரிழந்தது.



கடந்த சனிக்கிழமை அதிகாலை நெடுந்தீவில் வீடு ஒன்றில் ஐவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டனர். ஒருவர் படுகாயங்களுக்கு உள்ளான நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றுவருகின்றார்.

இந்த நிலையில், அந்த வீட்டில் வளர்க்கப்பட்ட நாயும் கொலையாளியின் தாக்குதலில் காயமடைந்திருந்தது. இந்த நிலையில், நேற்றுமுன்தினம் அந்த நாய் உயிரிழந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மட்டக்களப்பில்...

திட்டங்கள் மாவட்ட ரீதியாக இடம் பெற்று வருகின்றன. ஒத்துழைக்காதவர்கள்மீது சட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்படுகின்றன- என்றும் கூறினார். (ஐ)

## எங்களுடன்...

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, ஐக்கிய மக்கள் சக்தி அது தொடர்பான விவாதத்தில் மிகவும் வினைத்திறனுடனான கருத்துக்களை தெரிவிக்க இருக்கிறோம். அதனால் ஜனாதிபதி தற்போது தெரிவித்த விடயங்களை செயல்படுத்த வேண்டும் - என்றார்.

மேலும், எனக்கு விதிக்கப்பட்டிருந்த நிலையியல் கட்டளை 27இன் 2கீழ் கேள்விகளை கேட்பதற்கு முற்பட்ட போது ஜனாதிபதி சபையில் இருந்து வெளியேறிச் செல்ல முற்பட்டார்.

இதன்போது குறுக்கிட்ட எதிர்க்கட்சித் தலைவர், "27இன் 2கீழ் கேட்கப்படும் கேள்விகளையும் கேட்டுவிட்டு செல்லுங்கள்", என்றார்.

அதற்கு ஜனாதிபதி, எனது இராஜாங்க அமைச்சர்கள் இருவரும் சபையில் இருக்கின்றனர். உங்கள் கேள்விகளுக்கு அவர்கள் பதில் வழங்குவார்கள். அத்துடன், நான் சொல்வதைத்தான் செய்வேன். அதனால் நீங்களும் எங்களுடன் சேர்ந்து நடக்க முன்வாருங்கள் - என்று கூறிவிட்டு வெளியேறி விட்டார்.

எனினும், எதிர்க்கட்சித் தலைவர் தயவுசெய்து ஊகங்களை மேற்கொள்ள வேண்டாம். ஐக்கிய மக்கள் சக்தி உங்களுடன் சேர்ந்து நடக்கும் என ஒரு போதும் ஊகிக்க வேண்டாம். நாங்கள் விவாதிப்போம். கலந்துரையாடுவோம். ஆனால் உங்களுடன் சேர்ந்து நடக்கும் என நினைக்க வேண்டாம் - என்று கூறினார். (ஐ)

## வெடுக்கு...

நாட்களுக்குப் பின்னர் பூசை வழிபாடுகள் ஆரம்பமாகின.

வவுனியா வடக்கு ஒலுமடு வரலாற்று பெருமை கொண்ட ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் அமைந்துள்ளது.

இந்த ஆலயப் பகுதியை உரிமை கோரிய தொல்பொருள் திணைக்களம், பொலிஸ் திணைக்களம் என்பவற்றின் செயல்பாடுகளால் பூசை வழிபாடுகள் தடைப்பட்டன. இதன் பின்னர், அங்கிருந்த விக்கிரகங்கள் உடைக்கப்பட்டன.

இந்நிலையில், இது தொடர்பான வழக்கு வவுனியா மாவட்ட நீதிமன்றில் நடந்து வருகின்றது. இதில், திங்கட்கிழமை ஆலயத்தின் பூசை, வழிபாடுகளை அதிகாரிகள் எவரும் தடுக்க முடியாது என்று தீர்ப்பளித்தது. இதையடுத்து அங்கு பூசை வழிபாடு மீள ஆரம்பித்துள்ளது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# ராஜபக்ஷ காலத்தில் ஆடியதுபோல் இனிமேலும் ஆடுவதற்கு இடமில்லை

## சபையில் சஜித் பிரேமதாஸ காட்டமான கருத்து



கொழும்பு, ஏப். 27

**ராஜபக்ஷ அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் ஆடிய ஆட்டங்களை மீண்டும் ஆடுவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி இடமளிக்காதென ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

நேற்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் உரையாற்றிய பின்னர் சஜித் பிரேமதாஸ உரையாற்றும்பொதே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசாங்கத்தினால் வறிய மக்களுக்கு வழங்கப்படுகின்ற நிவாரணங்களை மொட்டுக் கட்சியைச் சேர்ந்தவர்களும் வேறு சில கட்சிகளைச் சேர்ந்தவர்களும் சேர்ந்தே, மக்களுக்கு விநியோகிக்கின்றனர். இவ்வாறான கட்சி அரசியலை உடன் நிறுத்தவேண்டும்.

இதனை நிறுத்தாது தொடர்ச்சியாக இவ்வாறு அரசியல் கலப்படத்தை மேற்கொண்டால் நேரடியாக உலக வங்கிக்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் அறிவிக்கமுடியும். ஆனால் தற்போதைய சூழலில் அதனைச் செய்யப்போவதில்லை.

இதனை உடனடியாக நிறுத்தவேண்டும்.

ரணில் விக்கிரமசிங்க எதிர்க்கட்சியில் இருக்கும்போது பஸில் ராஜபக்ஷவிடம் சர்வதேச நாணய நிதியத்துக்குச் செல்லுமாறு கூறியபோது ஆளும் தரப்பு அதை மறுத்திருந்தது.

ஆனால் தற்போது ரணில் சொல்வதற்கு எல்லோரும் கை உயர்த்துகின்றார்கள்-என்றார். (அ)

# பாடசாலை மாணவர்களுக்கு உணவு விநியோகம் நிறுத்தம்

## ஒப்புக்கொண்டார் கல்வி அமைச்சர்

கொழும்பு, ஏப். 27

உணவு வழங்குநர்களுக்கு பணம் வழங்குவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக மேல் மாகாணம் தவிர்ந்த ஏனைய அனைத்து மாகாணங்களிலும் பாடசாலை மாணவர்களுக்கான உணவு விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த நேற்று பாராளுமன்றத்தில் ஒப்புக்கொண்டார்.

இந்த வருடம் பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களுக்கான உணவு வழங்குநர்களுக்கு உலக வங்கி 87 கோடி ரூபா செலுத்த நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க கேட்ட கேள்விக்கு பதிலளிக்கும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார். (அ)

# கொடிகாமம் விபத்தில் பொலிஸ் அலுவலர் பலி!

யாழ்ப்பாணம், ஏப். 27

கொடிகாமம் எருவன் பகுதி விபத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார். மேலுமொரு பொலிஸ் உத்தியோகத்தர் படுகாயங்களுடன் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை- கொடிகாமம் வீதி எருவன் பகுதியில் நேற்று முன்தினம் இரவு விபத்து இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவரின் சடலம் பருத்தித்துறை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

விபத்தில் உயிரிழந்தவர் சாரதா வீதி, சங்கத்தானை, சாவகச்சேரியைச் சேர்ந்த 25 வயதான கோ.கஜீபன் ஆவார். இவர் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வந்துள்ளார்.

படுகாயமடைந்த மற்றைய உத்தியோகத்தர் நெல்லியடி பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர் என தெரிவிக்கப்படுகிறது.

விபத்து தொடர்பான விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# நாணய நிதியத்தின் நிபந்தனைகளை எதிர்ப்போரிடம் மாற்றுவழி உள்ளதா?

## அமைச்சர் நிமல் சபையில் கேள்வி

கொழும்பு, ஏப். 27

சர்வதேச நாணயநிதியத்தின் நிபந்தனைகளை ஏற்று முன்னோக்கிச் செல்வதை யாராவது எதிர்ப்பார்களாயின் அவர்கள் இந்த நாட்டை மீட்பதற்காக மாற்றுவழியை முன்வைக்குமாறு, துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டீ சில்வா தெரிவித்தார்.

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சர்வதேச நாணய நிதியமோ



அல்லது ஆசிய அபிவிருத்தி வங்கியோ அல்லது சர்வதேச நாணய நிதியமோ நலத்திட்டங்களை தடுக்கவில்லை. குறிப்பாக சமுர்த்தி போன்ற நிவாரண திட்டங்களை தகுதியானவர்களை தேர்ந்தெடுத்து வழங்குமாறே அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

சமுர்த்தி பெறுகின்ற 12 சதவீதத்தினர் உரிய தகைமைகளை கொண்டிருக்கவில்லை என்பது தற்போதைய ஆய்வில் இருந்து தெரியவந்துள்ளது.

அதிக வருமானம் பெறுகின்ற 12 சதவீதத்துக்கும் அதிகமானவர்களுக்கு அரசாங்கம் சமுர்த்திக் கொடுப்பனவை வழங்குகிறது.

இந்த 12 சதவீதமானவர்களுக்கான சமுர்த்தி கொடுப்பனவுகளை நிறுத்துமாறே சர்வதேச நாணய நிதியம் குறிப்பிடுகிறது-என்றார். (அ)

# மோசடியாளர்களின் வலையில் சிக்கி ஓமான் சென்ற இலங்கையர் நிர்க்கதி!

கொழும்பு, ஏப். 27

இலங்கையர்களை, ஓமான் தொழில்வாய்ப்புக்கு அனுப்புவதாக தெரிவித்து, முன்னெடுக்கப்படும் மோசடி தொடர்பில் தகவல் வெளியாகியுள்ளது.

பிலியந்தலை பகுதியைச் சேர்ந்த ஒருவர், கடுவலை நகரில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையம் ஒன்றை முன்னெடுத்து, வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் உத்தியோகபூர்வ இறப்பர் முத்திரையை, போலியான முறையில் தயாரித்து, இந்த மோசடியில் ஈடுபட்டுள்ளார்.

இவ்வாறாக ஓமானுக்கு அழைத்துச் செல்லப்படும் நபர்கள், மோசடியாளர்களினால் குத்தகைக்குப் பெற்றுக்கொள்ளப்பட்ட வீட்டில், பல மாதங்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்ட சிலர் தகவல் வெளியிட்டுள்ளனர்.

சுற்றுலா விஸாவில் தம்மை அழைத்துவந்து, பின்னர், ஓரிரு வாரத்தில் அல்லது ஓரிரு மாதத்தில் விஸாவைப் புதுப்பிப்பதாக கூறி, ஐந்தரை இலட்சம் ரூபாவை தம்மிடமிருந்து பெற்றதாக பாதிக்கப்பட்ட ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

சில நபர்களிடம் ஆறு, ஏழு இலட்சம் ரூபா பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. எனினும், தொழில்வாய்ப்பு வழங்கப்படாமல், வெளியே செல்லவும் அனுமதியின்றி, வீட்டுக்குள்ளேயே இருக்கவேண்டி உள்ளதாகவும் குறித்த நபர் தெரிவித்துள்ளார்.

இந்த மோசடியில் ஈடுபடும் நபர், தற்போது ஓமானில் தங்கி இருக்கின்ற நிலையில், பாதிக்கப்பட்டவர்கள், அவரிடம் தங்களுக்கு விசா நீடிப்பையோ அல்லது தொழில்வாய்ப்பையோ பெற்றுத்தருமாறு கோரி வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதனிடையே, சந்தேகநபர், வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் போலியான இறப்பர் முத்திரையைப் பயன்படுத்தி, சுற்றுலா விஸாவில் பெண் ஒருவரை ஓமானுக்கு அனுப்ப முயற்சித்த நிலையில், குறித்த பெண், கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார். (அ)

# தந்தை செல்வா சதுக்கத்தில் இடிதாங்கி, மோட்டர் திருட்டு!

யாழ்ப்பாணம், ஏப். 27

யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக உள்ள தந்தை செல்வா சதுக்கத்தில் பொருத்தப்பட்டிருந்த இடிதாங்கி மற்றும் 80 அடி நீளமான இடிதாங்கிக்குரிய செப்பிலான இணைப்பு திருடப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது

தந்தை செல்வா சதுக்கத்தில் நீண்ட காலமாக நீர் இறைக்கும் மோட்டர்களும் திருடப்படுவதாக தந்தை செல்வா சதுக்க பராமரிப்பாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

கிட்டத்தட்ட மூன்று தடவைக்கு ரூபா 75,000 பெறுமதியான மோட்டர்கள் திருடப்பட்டுள்ளதாகவும், திருட்டு தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதியப்பட்டுள்ளபோதிலும் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்திற்கு முன்பு உள்ள தந்தை செல்வா சதுக்க வளாகத்தில் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெறுவது வருத்தமளிப்பதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர். (அ)

# கழிவு முகாமை திட்டத்துக்காக ஜெய்கா 1.3 பில்லியன் ரூபா நிதி

கொழும்பு, ஏப். 27

இலங்கையில் உள்ள அரச வைத்தியசாலைகளில் தொற்று கழிவு முகாமைத்துவத்தை வலுப்படுத்தும் செயற்திட்டத்திற்காக ஜெய்கா எனப்படும் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு பிரதிநிதிகள் நிதியுதவி வழங்கியுள்ளனர்.

இதற்கமைய, சுமார் 1.3 பில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பான ஆவண பத்திரத்தில் நிதியமைச்சின் செயலாளர் மகிந்த சிறிவர்த்தன மற்றும் இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் ஆகியோர் கைச்சாத்திட்டனர். (அ)

# இடர்கள் குறித்து அறிவிக்க நவீன தொழில்நுட்ப முறை!

கொழும்பு, ஏப். 27

எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய அனர்த்த அபாய நிலைகளை மக்களுக்கு அறிவிப்பதற்காக நவீன தொழில்நுட்ப மற்றும் விஞ்ஞான முறையொன்றை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

அண்மைய நிலநடுக்கங்கள் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டபோதே அதன் பணிப்பாளர் நாயகம் சுதந்த ரணசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதேவேளை, இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட வளிமண்டலவியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அதுல கருணாநாயக்க, இந்த நாட்களில் அதிக வெப்பத்தை எதிர்கொள்ள வெள்ளை அல்லது வெளிர் நிற ஆடைகளை அணியுமாறு மக்களைக் கேட்டுக்கொண்டார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 27.04.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.